# ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறையின் சாதனைகள்

**(மே 2006 – மார்ச் 2009)**

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை

தமிழ்நாடு

# பொருளடக்கம்


| வ. எண் | திட்டம் | பக்கம் எண் |
| --- | --- | --- |
| 1. | ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித்துறை | 1 – 32 |
| 2. | தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் | 33 – 40 |
| 3. | தமிழ்நாடு வாழ்ந்து காட்டுவோம் திட்டம் | 41 – 46 |
| 4. | சுனாமி மறுவாழ்வுத் திட்டங்கள் | 47 – 52 |

# ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை

## I. ஊராட்சி நிர்வாகம்

- தமிழ்நாட்டில் உள்ள 12,618 கிராம ஊராட்சிகள், 385 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 29 மாவட்ட ஊராட்சிகளுக்கான தேர்தல்கள் அக்டோபர் 2006ல் நடத்தப்பட்டன. ஊரக பகுதிகளில் முன் எப்போதும் இல்லாத வகையில் 76 சதவீதம் மக்கள் வாக்களித்தனர்.

**அட்டவணை – 1**

**இட ஒதுக்கீடு விவரம் பின்வருமாறு**

| வ எண். | பதவி | மொத்த பதவி யிடங்கள்/ தலைமை பதவி யிடங்கள் | பெண்கள் | | ஆதிதிராவிடர் | | பழங்குடியினர் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் |
| 1. | மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் | 29 | 10 | 34 | 7 | 24 | 0 | 0 |
| 2. | ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் | 385 | 140 | 36 | 87 | 23 | 4 | 1 |
| 3. | கிராம ஊராட்சித் தலைவர்கள் | 12,618 | 4,275 | 34 | 3,143 | 25 | 156 | 1 |
| 4. | மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | 656 | 226 | 34 | 154 | 23 | 8 | 1 |
| 5. | ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் | 6,570 | 2,302 | 35 | 1,534 | 23 | 64 | 1 |
| 6. | கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | 97,458 | 32,638 | 33 | 24,630 | 25 | 983 | 1 |

- பல ஆண்டுகளாக தேர்தல் நடத்தப்படாமல் இருந்த **பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் கொட்டகச்சியேந்தல்** கிராம ஊராட்சிகளுக்கு அக்டோபர் 2006ல் வெற்றிகரமாக தேர்தல்கள் நடத்தப்பட்டது. தேர்தலில் புதியதாக வெற்றி பெற்ற கிராம ஊராட்சித்தலைவர்கள், துணைத்தலைவர்கள் மற்றும் கிராம சமுதாய தலைவர்களையும் அழைத்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சென்னையில் **13.11.2006** அன்று '**சமத்துவ பெருவிழா**' நடத்தி கௌரவித்தார்.

- உள்ளாட்சி நிறுவனங்களுக்கு கூடுதல் பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்கிட வேண்டி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் ஒரு **உயர் நிலைக் குழு** அமைக்கப்பட்டது. இக்குழுவின் முதல் கூட்டம் **7.3.2007** அன்று நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பங்கேற்புடன் உள்ளாட்சி பிரதிநிதிகள் கருத்தரங்கம் 18.3.2007 அன்று நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக, மண்டல வாரியாக, ஈரோடு (24.07.2007), திருச்சி (25.07.2007), திருவண்ணாமலை (03.08.2007), விருதுநகர் (23.08.2007) ஆகிய இடங்களில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் உள்ளாட்சிப் பிரதிநிதிகளின் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. இக்குழுவின் இரண்டாவது கூட்டம் 19.09.2007 அன்று நடைபெற்றது. மேலும், உள்ளாட்சி நிறுவனங்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குவது தொடர்பாக பிற துறை செயலாளர்களுடன் கலந்துரையாடல் 11.10.2007 மற்றும் 12.10.2007 ஆகிய தேதிகளில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் தலைமையில் நடைபெற்றது. இதனடிப்படையில், ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் வழங்குதல் குறித்து அமைக்கப்பட்டுள்ள உயர் நிலைக் குழுவின் அறிக்கை, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில், 10.12.2007 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் அளிக்கப்பட்டுள்ளது. இக்குழு, **39** பொருள்களில் அளித்துள்ள **99** பரிந்துரைகளில், இதுவரை **61** பரிந்துரைகளின் மீது அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதர பரிந்துரைகளின் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அரசாணை விரைவில் வெளியிடப்படும்.

- **ஊரக உள்ளாட்சிகளின் எல்லைகளை வரையறை செய்தல் –** பொதுமக்களின் நீண்ட கால கோரிக்கைகளை நிறைவேற்றும் பொருட்டு, **ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் நிலை உயர்த்துதல், அவற்றின் எல்லைகளை மாற்றியமைத்தல்,** அவைகளை பிரித்தல் சம்பந்தமாக மக்களின் கருத்தறிந்து, அவற்றினை பரிசீலனை செய்து பரிந்துரைகளை உடனடியாக சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களுக்கு அனுப்ப மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். துறைத் தலைவர்கள் இறுதி அறிக்கையை அரசுக்கு அனுப்புவர். அரசு இக்கருத்துருக்களை பரிசீலித்து தகுதியின் அடிப்படையில் உரிய முடிவுகளை அறிவிக்கும்.

- **ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிப் பகிர்வு –** மாநில அரசின் சொந்த **வரி வருவாயிலிருந்து** உள்ளாட்சி அமைப்புகளுக்கு **பகிர்ந்தளிக்கப்படும் நிதி** 2007–08ம் ஆண்டில் **8** சதவீதத்திலிருந்து **9** சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. ஊரக உள்ளாட்சி நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு **2006–07**ம் ஆண்டில் ரூபாய் **1,225** கோடியாக இருந்த நிதிப்பங்கீடு **2007–08ம்** ஆண்டில் ரூபாய் **1,583.58** கோடியாக உயர்ந்துள்ளது. இது **358 கோடி ரூபாய்** அல்லது **30 விழுக்காடு** அதிகமாகும். 2008–09ல் **ரூ 1716.14** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது 2007–08ஐ காட்டிலும் **ரூ 133** கோடி அதிகமாகும் அல்லது **8 விழுக்காடு** கூடுதலாகும்.

**அட்டவனை – 2**

**ஊரக உள்ளாட்சி நிறுவனங்களுக்கு நிதிப் பகிர்வு**

| வருடம் | ஒதுக்கீடு | முந்தைய ஆண்டை காட்டிலும் கூடுதல் சதவீதம் |
|---|---|---|
| 2006–07 | 1,225.00 | 23% |
| 2007–08 | 1,583.58 | 30% |
| 2008–09 | 1,716.44 | 8% |

- **ஒப்படைக்கப்பட்ட வருவாய் –** உள்ளாட்சி அமைப்புகளில் நிதி மேம்பாடு செய்யும் பொருட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் வழங்கப்பட்டு வந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் இனங்களான, தலவரி, தலமேல் வரி, முத்திரைத்தாள் கட்டணம் மீதான தீர்வை மேல்வரி மற்றும் கேளிக்கை வரி ஆகியவை **2007–08ம்** ஆண்டு முதல் மாநில அளவில் ஒருமுகப்படுத்தப்பட்டு உள்ளாட்சி அமைப்புகளுக்கு பிரித்து வழங்கப்படுகிறது. **2007–08ம்** ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபாய் **270** கோடியில் மூன்றில் இரண்டு பங்கு நிதி (அதாவது ரூ.180 கோடி) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள மூன்றில் ஒரு பங்கு (அதாவது ரூ.90 கோடி) நிதியில், ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களுக்கு புதிய வாகனங்கள் வாங்கவும், மிகவும் பழுதடைந்த ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டிடங்களுக்குப் பதிலாக புதிய கட்டிடங்கள் கட்டவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. **2008–09ம்** ஆண்டு ஒருமுகப்படுத்தப்பட்ட ஒப்படைக்கப்பட்ட வருவாயிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.**541.77** கோடியில், ரூ.180.59 கோடி திட்டக்கூறு நிதியாகும்.

## அட்டவனை – 3

### ஒருமுகப்படுத்தப்பட்ட ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டம் – பணி முன்னேற்றம் –2008–09

**(ரூ. கோடியில்)**

| வ. எண். | பணியின் பெயர் | ஒதுக்கீடு |
|---|---|---|
| 1. | கப்பிச் சாலைகளை தார் சாலைகளாக தரம் மேம்படுத்துதல் | 43.62 |
| 2. | ஊராட்சி அலுவலக கட்டிடம் கட்டுதல் | 21.78 |
| 3. | ஊராட்சி ஒனறிய அலுவலக கட்டிடம் கட்டுதல் 49.20* | |
| 4. | தெரு விளக்குகள் அமைத்தல் | 27.68 |
| 5. | சிமென்ட் கான்கிரீட் சாலைகள் பாலங்கள் 38.31 மற்றும் வாகனங்கள் முதலியவை | |

* 2007-08க்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.47.70 கோடி இதில் அடங்கும்.

- குடிநீர் வழங்குதல், சுகாதாரம், சாலைகள் மற்றும் தெருவிளக்குகளை பராமரித்தல் போன்ற அடிப்படை வசதிகளை நிறைவு செய்யும் பொறுப்பு கிராம ஊராட்சிகளைச் சார்ந்தது. ஆனால் பல கிராம ஊராட்சிகள் போதிய நிதி வசதியின்றி அடிப்படை வசதிகளை நிறைவு செய்ய சிரமப்படுவதால், இந்நிலையினை சரிசெய்ய கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

1. 2007–08ம் ஆண்டிலிருந்து மாநில நிதி ஆணைய நிதிப் பகிர்வில், கிராம ஊராட்சிகளின் பங்கு **47** சதவீதத்திலிருந்து **60** சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

2. மக்கள் தொகை அடிப்படையில் மட்டுமே நிதிப் பங்கீடு செய்யப்படும்போது, பல சிறிய ஊராட்சிகளுக்கு போதுமான நிதி கிடைப்பதில்லை. இந்நிலையினை மாற்ற மாநில நிதிக் குழு மான்யத்திலிருந்து அனைத்து ஊராட்சிகளுக்கும் **குறைந்தது தலா ரூபாய் 3 இலட்சம்** வீதம் சமமாக வழங்கவும், மீதமுள்ள தொகையை மக்கள் தொகை அடிப்படையில் வழங்கவும் ஆணையிடப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

3. அனைத்து ஊராட்சி ஒன்றியங்களில் சமசீர் நிதி கிடைக்க வேண்டும் என்ற நோக்கில், 2008–09ம் ஆண்டு முதல் மாநில நிதிக்குழு மான்யத்திலிருந்து விடுவிக்கப்படும் நிதியில் **குறைந்தது தலா ரூ 30.00** இலட்சம் வீதம் சமமாக வழங்க ஆணை வெளியிடப்பட்டு அதன்படி நிதி விடுவிக்கப்படுகிறது.

4. **மத்திய அரசிடமிருந்து பெறப்படும் பன்னிரெண்டாவது நிதிக் குழு மான்யம் முழுமையையும் கிராம ஊராட்சிகளுக்கு வழங்க அரசு ஆணையிடப்பட்டுள்ளது.** இது 2006–07ஆம் ஆண்டு இரண்டாவது அரையாண்டு ஒதுக்கீடு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு, ஊராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் திட்டங்கள் பற்றி பயிற்சியளித்திட, முதன்முறையாக இந்த அரசால், **3** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து **பயிற்சி தொகுப்பு நிதி** (Training Corpus Fund) ஏற்படுத்தப்பட்டுள்ளது. மற்ற ஊராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள புதுமையான மற்றும் சிறப்பான நடவடிக்கைகளை கண்டறியும் பொருட்டு, ஊராட்சி பிரதிநிதிகளுக்கு பட்டறிவு பயணம் ஏற்பாடு செய்யப்பட்டது. மாவட்டங்கள், சென்னை, திருச்சி, மதுரை மற்றும் சேலம் மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, அந்தந்த மண்டலங்களிலிருந்து பட்டறிவுப் பயணம் புறப்பட ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தப் பயணம் உத்தமர் காந்தி விருது பெற்ற ஒடந்துறை கிராம ஊராட்சி, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் கோயம்புத்தூர் மாவட்டம் மற்றும் தமிழ்நாடு தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், நீலகிரி மாவட்டங்களை உள்ளடக்கியது. 2007–08ல் பட்டறிவு பயணம் **8** அணிகளாக மேற்கொள்ளப்பட்டு, மொத்தம் **450** கிராம ஊராட்சித் தலைவர்கள் பங்கேற்றனர். இதற்கான பயணம் மற்றும் இடவசதிகள் முழுவதும் செய்து தரப்பட்டன. பட்டறிவு பயணத்தில் கலந்துக் கொண்ட கிராம ஊராட்சித் தலைவர்கள், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்களை **24.01.08** அன்று சந்தித்து பட்டறிவு பயணத்தினால் தாங்கள் மிகுந்த பயனை அடைந்ததாக விரிவாக எடுத்துரைத்தனர். மேலும் **2008–09** ஆம் ஆண்டிலும், **439** ஊரக உள்ளாட்சி ஆண் பிரதிநிதிகளுக்கும், **199** கிராம ஊராட்சி பெண் தலைவர்களுக்கும், கோயம்புத்தூர் மாவட்டம், ஒடந்துறை ஊராட்சியில் மேற்கொள்ளப்பட்ட புதுமையான மற்றும் சிறப்பான நடவடிக்கைகளை கண்டறியவும், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், சிறுதுளி கழிவு மேலாண்மை நிலையம், கோயம்புத்தூர் மாவட்டம் மற்றும் தமிழ்நாடு தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், நீலகிரி மாவட்டங்களுக்கும் பட்டறிவு பயணம் ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும் 2008–09 ஆம் ஆண்டில், தேசீய ஊரக வளர்ச்சி நிறுவனம், ஐதராபாத்திற்கு செல்ல உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு இரண்டு பட்டறிவு பயணங்கள் ஏற்பாடு செய்து தரப்பட்டது. அவ்வாறே, 700 கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு **12**அணிகளாக, **(4** அணிகள் பெண் ஊராட்சி தலைவர்கள் நீங்கலாக) **(191** பெண் ஊராட்சித் தலைவர்களுடன்) மதுரை, கொடைக்கானல் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு பட்டறிவு பயணம் மேற்கொள்ள ஏற்பாடு

செய்யப்பட்டன. புதுமையான சிறப்பான நடவடிக்கைகளை கண்டறியும் பொருட்டு, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகம், தமிழ்நாடு தோட்டக்கலை கல்லூரி, பெரியக்குளம், மத்திய அரசு ஆடு மற்றும் முயல் ஆராய்ச்சி மையம், மன்னவனூர் ஊராட்சியிலுள்ள மீன் பண்ணை, தான் ஃபவுண்டேஷனால் செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள், நரிப்பேயூரிலுள்ள மண்டபம் மத்திய கடல்சார் மீன்வள நிறுவனம், மற்றும் மைக்கேல் பட்டினம் கிராம ஊராட்சிகளுக்கு பட்டறிவு பயணம் மேற்கொள்ள **900** கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் துணைத்தலைவர்களுக்கு **கட்டட தொழில்நுட்பம்** மற்றும் தரமான கட்டுமானங்கள் சம்பந்தமான பயிற்சி **சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தில்** ஏற்பாடு செய்யப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, தெரிவு செய்யப்பட்ட 900 ஊராட்சி தலைவர் மற்றும் துணைத் தலைவர்களை உள்ளடக்கிய ஊராட்சிப் பிரதிநிதிகளுக்கு **கட்டட தொழில் நுட்பம் மற்றும் தரமான கட்டுமான தொழில் நுட்பம்** குறித்து சென்னையில் உள்ள **அண்ணா பல்கலைகழகத்தில்** பயிற்சி நடத்தப்பட்டது. இதற்காக இதுவரை ''பயிற்சி தொகுப்பு நிதியிலிருந்து ரூ.**3.05** கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

6. **ராஷ்ட்ரிய கிராம் ஸ்வராஜ் யோஜனா** - தேசிய கிராம தன்னாட்சித் திட்டம். (ஆர்.ஜி.எஸ்.ஒய்) இத்திட்டத்தின் கீழ் உள்ளாட்சி நிர்வாகத்தை மேற்கொள்பவர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிப்பது மிகவும் அவசியமாகிறது. மாநில ஊரக வளாச்சி நிறுவனம் மற்றும் ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனங்களில் நடைபெற்ற **1,567** பயிற்சிகள் மூலம் **50,504**, ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள் (ம) ஊராட்சி வார்டு உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் ஊராட்சி பிரதிநிதிகளுக்கும் பயிற்சியளிக்கவே இந்த அரசு அரசாணை நிலை எண் 29 ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை நாள் 31.3.2009 வெளியிட்டுள்ளது. மேலும் மத்திய மாநில அரசுகள் 2008–09 க்கான 2.44 கோடி ரூபாயை ஊராட்சி நிர்வாகிகளுக்கும் திறன் மேம்பாட்டு பயிற்சிக்காக ஒதுக்கீடு செய்துள்ளனர்.

7. **பின் தங்கிய மண்டல மானிய நிதி (BRGF)** திறன் மேம்பாட்டுப் பயிற்சி நிதி – 2008–09 ஆம் ஆண்டில் இத்தலைப்பின் கீழ் ரூ.16.32 கோடி தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி நிர்வாகிகளுக்கு பயிற்சி அளிக்கவும், பிற துறை அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கவும், பட்டறிவுப் பயணம் மேற்கொள்வதற்கும், கிராம சபா முனைப்பு இயக்கங்களை நடத்தவும், தொலைக்காட்சி மற்றும் வானொலியில் நிகழ்ச்சி நிரல்கள் நடத்தவும், ஊராட்சி செய்தி இதழ்கள் வெளியிடவும், வட்டார ஆதார

மையங்கள் அமைக்கவும், மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் இந்நிதி பயன்படுத்தப்படும்.

- கிராம ஊராட்சிகளின் ஆண்டு செலவினத்தில் 70 சதவீதம் மின்சார கட்டணத்திற்காக மட்டுமே செலவினம் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், மின்வாரியம் தொடர்புடைய நீண்டகால பிரச்சினைகளுக்கு வெற்றிகரமாகக் கீழ்க்கண்ட தீர்வுகள் காணப்பட்டுள்ளன.

1. ஊரகப் பகுதிகளுக்கு மின் கட்டணம் யூனிட் ஒன்றுக்கு ரூபாய் **3.40** லிருந்து ரூபாய் **3** ஆக குறைக்கப்பட்டுள்ளது.

2. ஊராட்சிகள் மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைக் கட்டணத்தின் மீதான அபராத வரி **12** சதவீதத்திலிருந்து **6** சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

3. 13.03.2007க்கு முன்பு நிலுவையிலிருந்த மின் வாரியத்திற்கு வழங்க வேண்டிய அபராத வரி ரூ. **18.46 கோடி** தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

4. மின்கட்டணம் செலுத்துவதற்கான கால அளவு **20** நாட்களிலிருந்து **60** நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

5. ஊராட்சிகளிலுள்ள மின் இணைப்புகளுக்கு மீட்டர் பொருத்தாது பட்டியல் அளிப்பதை தவிர்க்க, அனைத்து மின் இணைப்புகளுக்கும் மீட்டர்கள் பொருத்தி, மீட்டர் அளவுகளின் அடிப்படையில் பட்டியல் வழங்குவது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

6. புதிய மின் கம்பங்கள் அமைப்பதில் அதிக செலவினமும், கால தாமதமும் ஏற்படுவதை தவிர்க்க, ஒரு மின் கம்பம் நிறுவ நிலையான கட்டணமாக **ரூபாய் 9,500** என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

7. அரசாணை எண் 206 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை நாள் 31.12.2007ல் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை திட்டங்களின் மூலம் பிற துறைகளின் பயன்பாட்டிற்காக கட்டித் தரப்படும் கட்டிடங்களுக்கான மின் இணைப்பு பெறுவதற்காக தமிழ்நாடு மின் வாரியத்திடம் அளிக்கும் அனைத்து விண்ணப்பங்களுக்கும் ஒட்டுமொத்த **"தடையின்மைச் சான்று"** வழங்கப்பட்டதுடன், தொடர்ந்து மின் நுகர்தலுக்காக கட்டணத்தை அத்துறைகளே செலுத்தலாம் என அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதன் மூலம் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு எவ்வித நிதிச்சுமையும் இல்லை.

மேற்கண்ட நடவடிக்கைகளினால், தமிழ்நாடு மின்வாரியம் தொடர்பான நீண்ட கால பிரச்னைகள் தீர்க்கப்பட்டு, கிராம ஊராட்சிகளின் நிதி நிலை மேம்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- ஆண்டுதோறும் சிறப்பான மற்றும் புதுமையான முயற்சிகளை செயல்படுத்தும் 15 கிராம ஊராட்சிகளை கௌரவிக்கும் வகையில், அரசால் "**உத்தமர் காந்தி ஊராட்சி விருது**" அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. **2006–07ஆம்** ஆண்டுக்கான **உத்தமர் காந்தி ஊராட்சி விருதுக்கு** தெரிவு செய்யப்பட்ட **15** கிராம ஊராட்சிகளுக்கு கேடயமும், ரூபாய் **5 லட்சம்** ரொக்கப் பரிசும் அப்போது பதவி வகித்த கிராம ஊராட்சித் தலைவர்களுக்குப் பதக்கமும் நற்சான்றிதழும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் **10.10.2007** அன்று வழங்கப்பட்டது. **2007–08**ஆம் ஆண்டுக்கான **உத்தமர் காந்தி ஊராட்சி விருதுக்கு** தெரிவு செய்யப்பட்ட **15** கிராம ஊராட்சிகளுக்கு கேடயமும், ரூபாய் **5 லட்சம்** ரொக்கப் பரிசும் கிராம ஊராட்சித் தலைவர்களுக்குப் பதக்கமும் நற்சான்றிதழும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் **19.12.08** அன்று வழங்கப்பட்டது.

**அட்டவனை – 4**

**உத்தமர் காந்தி ஊராட்சி விருது – விருதுபெற்ற ஊராட்சிகள்**

| **2006–07** | | **2007–08** | |
|---|---|---|---|
| **மாவட்டம்** | **ஊராட்சிகள்** | **மாவட்டம்** | **ஊராட்சிகள்** |
| கோயம்புத்தூர் | ஒடந்துறை | திருநெல்வேலி | கீழவெள்ளகால் |
| ஈரோடு | திண்டல் | விருதுநகர் | பெத்துரெட்டியபட்டி |
| இராமநாதபுரம் | மைக்கேல் பட்டிணம் | இராமநாதபுரம் | தாமரைக்குளம் |
| சிவகங்கை | நாலுகோட்டை | நாகப்பட்டிணம் | விழுந்தமாவடி |
| வேலூர் | காட்டுப்புத்தூர் | திருவாரூர் | பள்ளிவர்த்தி |
| சேலம் | சின்னனூர் | திருநெல்வேலி | இடையன்குடி |
| திருவாரூர் | கீழத்திருப்பாலைக்குடி | தஞ்சாவூர் | சீனிவாசநல்லூர் |
| கன்னியாகுமரி | திக்கணங்கோடு | இராமநாதபுரம் | திருவரங்கம் |
| திருச்சி | வாளாடி | கரூர் | ஈசநத்தம் |

| | | | |
|---|---|---|---|
| தேனி | லெட்சுமிபுரம் | நீலகிரி | தும்மனட்டி |
| நாமக்கல் | காடச்சநல்லூர் | தேனி | இராமசாமிநாயக்கன்பட்டி |
| காஞ்சிபுரம் | பாப்பநல்லூர் | நாமக்கல் | முதலைப்பட்டி |
| கடலூர் | மா.கொளைக்குடி | திண்டுக்கல் | ம.மு.கோவிலூர் |
| விழுப்புரம் | ஜக்காம்பேட்டை | ஈரோடு | மைலம்பாடி |
| திண்டுக்கல் | கொ.கீரனூர் | சிவகங்கை | காட்டேந்தல் சுக்கானூரணி |

- **ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு படிகளை உயர்த்தி வழங்குதல் :** அரசாணை எண்.262, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 20.12.1997–ன் படி கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களுக்கு நிரந்தர பயணப்படி வழங்க அரசு ஏற்கனவே ஆணையிட்டுள்ளது. 1999ம் ஆண்டு இத்தொகையை மேலும் 10 சதவீதம் உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டது. அதன்பின் நிரந்தரப் பயணப்படி திருத்தப்படவில்லை. அரசாணை எண். 569, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 28.9.07ன் படி, ஊரக உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளுக்கான நிரந்தர பயணப்படியினை அரசு உயர்த்தியுள்ளது. முன்னர் வழங்கப்பட்ட மற்றும் தற்போது உயர்த்தப்பட்ட நிரந்தரப்பயணப்படி விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை – 5**

**ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கான மாதாந்திர நிரந்தர பயணப்படி**

| வ. எண். | அலுவலகம் / பதவியின் பெயர் | முன்னர் வழங்கப்பட்ட மாதாந்திர நிரந்தர பயணப்படி (ரூ.) | திருத்தப்பட்ட மாதாந்திர நிரந்தர பயணப்படி (ரூ.) |
|---|---|---|---|
| 1 | கிராம ஊராட்சித் தலைவர் | 330 | 500 |
| 2 | ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் | 550 | 750 |
| 3 | ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர் | 220 | 400 |
| 4 | மாவட்ட ஊராட்சித் தலைவர், | 1,100 | 1,500 |
| 5 | மாவட்ட ஊராட்சி உறுப்பினர் | 330 | 500 |

- **உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்குதல்** ஈரோடு மற்றும் திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற ஊராட்சித் தலைவர்களின் மண்டல மாநாட்டில், ஊராட்சித் தலைவர்கள் அளித்த கோரிக்கைகளின் அடிப்படையில், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் 12,618 ஊராட்சித் தலைவர்களுக்கும் அடையாளஅட்டை வழங்கப்படும் என அறிவித்ததை தொடர்ந்து உடனடியாக அனைவருக்கும் அடையாள அட்டை வழங்கப்பட்டது. மேலும், மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் ஆகிய அனைவருக்கும் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன.

- **உள்ளாட்சி அமைப்புகள் தினம்:–** ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்அதிகபட்ச பொது மக்களின் தொடர்பின் அடிப்படையில் அமைந்ததாகும். எனவே மக்களுக்கும் உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் இடையேயான தொடர்புகளை வலுப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. இதன் மூலம் ஒளிவுமறைவற்ற மற்றும் வெளிப்படையான உள்ளாட்சிகளின் நிர்வாகத்தை கொண்டுவர இயலும். அதே சமயத்தில் உள்ளாட்சி அமைப்புகளின் சாதனைகளை மக்கள் அறிய செய்யவும், திட்டங்கள் அதன் செயலாக்கம் மற்றும் உள்ளாட்சி நிர்வாகம் குறித்த தகவல், கல்வி, மற்றும் தொடர்பு இயக்கங்கள் நடத்தவும் வேண்டியுள்ளது. எனவே ஒரு ஆண்டில் ஒரு குறிப்பிட்ட தினத்தை ‘‘உள்ளாட்சி அமைப்புகள் தினம்’’ என கடைப்பிடிப்பது இவ்வகை நடவடிக்கைகளில் ஒன்றாகும். இவ்வாறு அரசு முடிவு செய்து, ஆண்டுதோறும் நவம்பர் முதல் நாளன்று ‘‘உள்ளாட்சிகள் தினவிழா’’ கொண்டாடுவதற்கு அரசாணை (ப) எண்.632, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி1) துறை, நாள் 26.10.2007ல் அரசு உத்தரவிடப்பட்டு அதன்படி ஒவ்வொரு ஆண்டும் அனைத்து ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களால் கொண்டாடப்பட்டு வருகிறது.

- **கிராம ஊராட்சி கணக்குகளை ஒழுங்கு முறைபடுத்துதல்:-** கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள் திட்டப் பணிகளுக்கான நிதியையும், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திற்கான தொகையினையும், பணியினை அளவு மற்றும் மேலளவு செய்யாமலும், பட்டியல்களை சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) அவர்களின் ஒப்புதல் பெறாமலும், காசோலையை அளித்தது பல சந்தர்ப்பங்களில் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. ஊராட்சித் தேர்தலுக்கு முன்னர் அதிக அளவில், அனுமதியின்றி பணம் எடுத்த நிகழ்வுகளும் உள்ளன. எனவே அரசு, கிராம ஊராட்சிக் கணக்குகளை மேலும் முறைப்படுத்தவும் மற்றும் கணக்குகளைப் பராமரிப்பதற்கான

வழிமுறைகளை நெறிப்படுத்தவும், அரசாணை எண்.146, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி4) துறை, நாள் 17.8.2007ல் ஆணை வெளியிட்டுள்ளது. மேலும் இதனை இன்னும் நெறிபடுத்திடவும் கணக்குகளை முறைப்படுத்திடவும் அரசாணை நிலைஎண் 178 ஊ.வ. (ம) ஊராட்சித் துறை நாள் 25.11.2008 மற்றும் அரசாணை நிலை எண் 180 ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை நாள் 1.12.2008 வெளியிடப்பட்டுள்ளது.

- **நிர்வாக அதிகாரம்:-** உள்ளாட்சி அமைப்புகள் மேற்கொள்ளும் பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கும் அதிகார வரம்பினை உயர்த்துதல். உள்ளாட்சி அமைப்புகள் தங்கள் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளும் பணிகளுக்கு வழங்கும் நிர்வாக அனுமதி வரம்பினை உயர்த்தி, அரசு ஆணையிட்டுள்ளது. அதன்படி, கிராம ஊராட்சிகள், பொது நிதியிலிருந்து மேற்கொள்ளும் ஒரு பணிக்கு ரூபாய் 1 லட்சத்திற்கும் மிகாமல் நிர்வாக அனுமதி வழங்கலாம் என்று இருந்த நிலையை மாற்றி ரூபாய் 2 லட்சம் வரை ஒரு பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கலாம். அதேபோல் ஊராட்சி ஒன்றியம் மேற்கொள்ளும் ஒரு பணிக்கு ரூபாய் 5 லட்சத்திற்கும் மிகாமல் நிர்வாக அனுமதி வழங்கலாம் என்று இருந்த நிலையை மாற்றி, ரூபாய் 10 லட்சம் வரை ஒருபணிக்கு நிர்வாக அனுமதி வழங்கலாம். மாவட்ட ஊராட்சி ஒரு பணிக்கு ரூபாய் 10 லட்சத்திற்கும் மிகாமல் நிர்வாக அனுமதி வழங்கலாம் என்று இருந்த நிலையை மாற்றி ரூ. 20 லட்சம் வரை ஒரு பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கலாம் என ஆணையிடப்பட்டுள்ளது. பணிகளுக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்குவதற்கு பொறியாளர்களுக்கான அதிகாரத்தினை உயர்த்தவும் மற்றும் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகளைப் பொறுத்தவரை பொறியியல் பிரிவு அலுவலர்களுக்கான அளவீடு மற்றும் மேல் அளவீடு செய்யும் அதிகாரத்தினை சீரமைக்கவும் இந்த அரசு முடிவு செய்து அரசாணை (நிலை) எண்.203, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (உ.அ.1) துறை, நாள் 20.12.2007ல் ஆணையிட்டுள்ளது. மேலும் ஒப்பந்தப் புள்ளிகள் ஆய்வு செய்வதற்கான அதிகார வரம்பினை நிர்ணயம் செய்தும் அரசாணை (நிலை) எண்.204, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (உ.அ.1) துறை, நாள் 24.12.2007ல் அரசு ஆணையிட்டுள்ளது.
- அனைத்து மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றிய தலைவர்களுக்கு **கணினி மற்றும் பிரின்டர்களை பயன்படுத்துவதற்கு** வசதியாக அரசு அனுமதித்து ஆணையிட்டுள்ளது.
- கிராம ஊராட்சிகளில் தகவல் தொடர்பு வசதிகளை மேம்படுத்த அனைத்து கிராம ஊராட்சி அலுவலகங்களுக்கும் **தொலைபேசியை அனுமதித்து** அரசு ஆணையிட்டுள்ளது.

- சமூக பொருளாதார **மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபடும் வர்த்தக மற்றும் தொழில் நிறுவனங்களின்** நடவடிக்கைகளை கண்டறிந்து, இந்நிறுவனங்களை ஊக்குவித்து சிறப்பிக்கவும், 2007–08 ஆண்டு முதல் தகுதிவாய்ந்த 5 நிறுவனங்களுக்கு, தலா 5 லட்சம் ரூபாய் வீதம் பரிசுத்தொகை மற்றும் நற்சான்றிதழ் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இதன்படி **2007 –08 மற்றும் 2008–09ம் ஆண்டுக்கு கீழ்கண்ட 9 வர்த்தக** மற்றும் தொழில் நிறுவனங்களை தொழில் நிறுவனங்களின் **சமூக பொருளாதார பொறுப்புணர்வு விருதுக்கு** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அவை அட்டவணை 6ல் பட்டியலிடப்படுகிறது.

**அட்டவணை – 6**

**சமூக பொருளாதார மேம்பாட்டுப் பரிசு – தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனங்கள்**

| வ. எண். | 2007–08 | வ. எண். | 2008–09 |
|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு காகிதம் மற்றும் செய்தித் தாள் நிறுவனம் , காகிதபுரம், கரூர் மாவட்டம் | 1. | சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேசன் லிமிடெட், மணலி, சென்னை. |
| 2. | எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு நிறுவனம், காரைக்கால், பாண்டிச்சேரி | 2. | ஸ்டீல் அத்தாரிட்டி ஆப் இந்தியா லிமிடெட், சேலம் உருக்கு நிறுவனம், சேலம் மாவட்டம். |
| 3. | ஸ்ரீநிவாசன் சர்வீசஸ் அறக்கட்டளை, டி.வி..எஸ். மோட்டார் குழுமம், சென்னை | 3. | ஆர்கிட் கெமிகல்ஸ் மற்றும் பார்மாசூட்டிகல்ஸ் லிமிடெ், நுங்கம்பாக்கம், சென்னை |
| 4. | செயின்ட் கோபெய்ன் கிளாஸ் இந்தியா லிமிடெட், ஸ்ரீ பெரும்புதுார், காஞ்சிபுரம் மாவட்டம். | 4. | ஸ்ரீ இராமலிங்கா மில்ஸ் லிமிடெட், அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம். |
| 5. | சக்தி மசாலா தனியார் நிறுவனம், மாமரத்துப்பாளையம், ஈரோடு மாவட்டம். | | |

- **உள்ளாட்சி நிறுவன பிரதிநிதிகளின் பதவி காலத்தை நிலைப்படுத்துதல்:** அற்பமான மற்றும் ஏற்றுக் கொள்ள இயலாத காரணங்களுக்காக அடிக்கடி கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லா தீர்மானங்களினால் ஊரக உள்ளாட்சிகளில் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தப்படுதல் மற்றும் திட்டமிடுதல் ஆகிய பணிகள் பாதிக்கப்படுகிறது. இது பொது மக்கள் நலனுக்கு பெரிதும் குந்தகம் விளைவிக்கக் கூடியதாக உள்ளது. எனவே, நம்பிக்கையில்லா தீர்மானங்கள் கொண்டுவருதல் மற்றும் நிறைவேற்றுதல் குறித்து 1994ம் ஆண்டு தமிழ்நாடு

ஊராட்சிகள் சட்டத்தில் தொடர்புடைய பிரிவுகளுக்கு திருத்தங்கள் செய்யப்பட்டதுடன், நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வருவதற்கு உரிய குறைந்தபட்சம் நபர்கள் கூட்டத்தில் பங்கேற்கவேண்டும் என்று சட்டத்தில் கடுமையாக்கப்பட்டுள்ளது. அ த ன் ப டி , கி ர ா ம ஊராட்சித் துணைத் தலைவர், ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் சரிபாதி என்பதை குறைந்தபட்சம் ஐந்தில் மூன்று பங்கு எனவும், தீர்மானத்தை நிறைவேற்ற தற்போது மூன்றில் இரண்டு பங்கு என்பதை ஐந்தில் நான்கு பங்கு எனவும் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், மேற்படி சட்ட திருத்தப்படி, ஊரக உள்ளாட்சி அமைப்பின் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள் பொறுப்பேற்ற ஓராண்டுக்குள்ளோ, பதவிக்காலம் முடியும் இறுதி ஆண்டிலோ நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர இயலாது.

- **மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கிராம ஊராட்சிகளுக்கு தனி அலுவலர்களை நியமனம் செய்தல்** – சில குறிப்பிட்ட நிகழ்வுகளில் கிராம ஊராட்சிகளுக்கு தனி அலுவர்களை நியமனம் செய்யும் அதிகாரம் அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், இதில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கவும் ஊராட்சி நிர்வாகம் இடையூறின்றி செயல்படவும் 1994 – ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில், பிரிவு 9 –சி புதிதாக சேர்க்கப்பட்டது. இதன்படி தேர்தல்கள் நடத்தப்பட்ட பின்பும் கிராம ஊராட்சியை அமைக்க இயலவில்லை எனில், சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அக்கிராம ஊராட்சிக்கு தனி அலுவலரை நியமனம் செய்யலாம்.

- **கிராம ஊராட்சிகளால் மேற்கொள்ள வேண்டிய திட்டங்களை செயல்படுத்த கிராம ஊராட்சித் தலைவர்களை பொறுப்பாக்குதல் –** கிராம ஊராட்சிகள் தங்கள் பொது நிதியில் மேற்கொள்ளும் பணிகளுடன் மத்திய மற்றும் மாநில அரசின் பல்வேறு திட்டங்களையும் செயல்படுத்தி வருகின்றன. இருப்பினும் கிராம ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்படும் திட்டங்களை செயல்படுத்தவோ அல்லது மேற்கொள்ளவோ கிராம ஊராட்சி தலைவரைக் கோருவதற்கு 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் திட்டவட்டமான வழிவகை எதுவும் செய்யப்படவில்லை. எனவே சட்டப்பிரிவு 46–ல் கிராம ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்ட திட்டங்களை செயல்படுத்த அல்லது மேற்கொள்ள அக்கிராம ஊராட்சியின் தலைவரைக் கட்டாயப் பொறுப்பாக்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- **ஊராட்சிகளின் செயல்பாடு குறித்த ஆண்டு அறிக்கை** – மாவட்ட ஊராட்சிகள் தற்போது திட்டமிடுதல் மற்றும் ஆலோசனை வழங்குதல் ஆகியவற்றில் மட்டுமே தனது பங்களிப்பினை ஆற்றி வருகின்றது. ஆனால் வளர்ச்சி திட்டங்கள் ஊராட்சி ஒன்றியங்களாலும், கிராம ஊராட்சிகளாலும் செயல்படுத்தப்படுகிறது. இந்நிலையில் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் ஒவ்வொரு மாவட்ட ஊராட்சியும் தங்களது ஆண்டு அறிக்கையினை மட்டுமே சட்டமன்றப் பேரவையின் முன்பு சமர்ப்பிக்கும் முறை இருந்ததால், புதியதாக பிரிவு 166–ஏ சேர்க்கப்பட்டு மூன்றடுக்கு ஊராட்சிகளின் செயல்பாட்டுக்கான ஒட்டுமொத்த அறிக்கையினை ஊராட்சிகளின் செயல்பாடுகள் குறித்த ஆண்டறிக்கையாக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன் வைக்க தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994–ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்படி 2006–07 (ம) 2007–08க்கான ஊராட்சிகளின் செயல்பாடு குறித்த ஆண்டு அறிக்கை கடந்த பிப்ரவரி 2009ல் சட்டமன்ற பேரவை முன் வைக்கப்பட்டது.

- **தண்டனைகளை உயர்த்துதல்** – தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பட்டியல் 2–ல் வரையறுக்கப்பட்டுள்ள நெறிமுறைகளை மீறுபவர்களுக்கு விதிக்கப்படக் கூடிய அபராதம் இணைப்பு பட்டியல் 3–ல் குறிப்பிடப்பட்டுள்ளது. தொடர் மீறுகைகளுக்கு விதிக்கப்படக்கூடிய அபராதமும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி அபராதத் தொகைகள் 50 ஆண்டுகளுக்கு முன் வகுக்கப்பட்டதால், அதனுடைய முக்கியத்துவத்தை இழந்துவிட்டது. எனவே, இணைப்பு பட்டியல்கள் 2 மற்றும் 3–ல் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத் தொகைகள் தற்போது திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வழிவகைகளை முறையாக நடைமுறைப்படுத்தி கண்காணிக்கவும், மீறுபவர்களிடமிருந்து அதிகமான தண்டனைத் தொகையை வசூல் செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- **ஊராட்சி உறுப்பினர்களின் தகுதியின்மை** – மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1951–ல் சட்டமன்றங்களின் உறுப்பினர்களுடைய தகுதியின்மையை குறிக்கும் வழிவகைகளைப் போல் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவுகள் 34, 35, 37, 38, 39 மற்றும் 41 –க்கு திருத்தங்கள் வெளியிட்டுள்ளதன் மூலம், ஊராட்சி உறுப்பினராக இருக்கக் கூடியவரின் தகுதியின்மையை தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தை கலந்தாலோசித்தபின் முடிவு செய்ய அரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இதன்படி பிரிவு 41–ஏ, 41–பி, 41–

சி மற்றும் 41–டி என புதிய பிரிவுகள் சேர்க்கப்பட்டு, தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு ஊராட்சி உறுப்பினரின் தகுதியின்மை தொடர்பாக விசாரணை செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

- **தலவரி மற்றும் தல மேல்வரி உயர்வு** – இரண்டாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி, தலவரியை ஒரு ரூபாயிலிருந்து இரண்டு ரூபாயாக உயர்த்தியும், தலமேல் வரியை ஐந்து ரூபாயிலிருந்து ஏழு ரூபாயாக உயர்த்தியும், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 167(1) மற்றும் பிரிவு 168–க்கு உரிய திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளது.

## II. ஊரக வளர்ச்சித் திட்டங்கள்

- 13.05.2006 அன்று நிலுவையிலிருந்த **1.540 இலட்சம்** பணிகளில் **1.538 இலட்சம்** பணிகள் இதுவரை முடிக்கப்பட்டுள்ளது.

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஜனவரி 2007ம் ஆண்டில் தொடங்கி வைக்கப்பட்ட **அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டமே** தற்போது செயல்படுத்தப்படும் மத்திய மற்றும் மாநில அரசுத் திட்டங்களில், மிகப் பெரிய திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஊராட்சியிலும் குளம், நூலகம், விளையாட்டு மையம், சுடுகாடு/இடுகாடு, குடிநீர்த் திட்டப் பணிகள் ஆகிய கட்டாய பணிகளும், தெரு விளக்குகள், மீன்வளர்ப்பு குளங்கள், கிராமச் சந்தைகள் ஆகிய விருப்பப் பணிகளை உள்ளூர் தேவையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன.

**அட்டவணை – 7**

**அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – ஒதுக்கீடு மற்றும் செலவினம்**

**(ரூ.கோடியில்)**

| வருடம் | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | ஒதுக்கீடு | செலவினம் |
|---|---|---|---|
| 2006–07 | 2,540 | 513.08 | 484.15 |
| 2007–08 | 2,534 | 511.87 | 474.24 |
| 2008–09 | 2,521 | 509.24 | 373.89 |
| 2009–10 | 2,511 | 507.27 | |

## அட்டவணை – 8

## அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – வருடாந்திர முன்னேற்றம்

| வ. எண். | பணிகளின் விவரம் | 2006–07 | | 2007–08 | | 2008–09 (31.03.2009 வரை) | |
|---|---|---|---|---|---|---|---|
| | | எடுக்கப் பட்ட பணிகள் | முடிக்கப் பட்ட பணிகள் | எடுக்கப் பட்ட பணிகள் | முடிக்கப் பட்ட பணிகள் | எடுக்கப் பட்ட பணிகள் | முடிக்கப் பட்ட பணிகள் |
| 1. | குளங்கள் | 2,599 | 2,598 | 2,546 | 2,546 | 2,520 | 1,590 |
| 2. | சுடுகாடு / இடுகாடு | 4,482 | 4,482 | 3,850 | 3,850 | 3,531 | 3,385 |
| 3. | விளையாட்டு மையங்கள் | 2,539 | 2,539 | 2,536 | 2,536 | 2,607 | 787 |
| 4. | நூலகங்கள் | 2,500 | 2,500 | 2,516 | 2,516 | 2,520 | 2,186 |
| 5. | குடிநீர் வழங்கல் | 8,576 | 8,576 | 7,265 | 7,265 | 5,693 | 5,679 |
| 6. | சிமெண்ட் சாலைகள் எண்/நீளம் கி.மீ. | 9,972 / 1339.39 | 9,972 / 1339.39 | 8,158 / 842.30 | 8,158 / 842.30 | 5,512/ 718.82 | 5,499 / 713.75 |
| 7. | உள்நாட்டு மீன்வளம் | 1,031 | 1,031 | 1,097 | 1,097 | 908 | 908 |
| 8. | கிராமச் சந்தைகள் | 122 | 122 | 46 | 46 | 32 | 32 |
| 9. | தெரு விளக்குகள் | 2,526 | 2,526 | 2,524 | 2,524 | 2,222 | 2,222 |
| 10. | இதரப் பணிகள் | 7,691 | 7,691 | 6,712 | 6,712 | 4,734 | 4,348 |
| | **மொத்தம்** | **42,038** | **42,037** | **37,250** | **37,250** | **30,279** | **26,636** |

மேலும், இதர துறைகளில் குறிப்பாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நெடுஞ்சாலைத் துறை, கல்வித் துறை மற்றும் வேளாண் துறை மற்றும் பிற துறை திட்டங்களின் நிதி ஆதாரங்களை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இதர திட்டங்களுடன் இயன்றளவு ஒருங்கிணைத்து, ஒவ்வொரு ஆண்டும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்படவுள்ள கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படும்.

## அட்டவணை – 9

### திட்டங்கள் மற்றும் நிதிகளின் ஒருங்கிணைப்பு

(ரூ. லட்சத்தில்)

| ஆண்டு | பணிகள் எண்ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை | அ.கி.அ.ம.தி ஊராட்சிக்கான சராசரி தொகை |
|---|---|---|---|
| 2006–07 | 7,80,805 | 2,13,725.38 | 84.14 |
| 2007–08 | 7,43,087 | 2,22,891.34 | 87.96 |
| 2008–09 | 5,11,603 | 2,55,451.98 | 101.37 |

- **தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் – தமிழ்நாடு :** இத்திட்டம் **2.2.2006 முதல்** கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, நாகப்பட்டினம், திண்டுக்கல், சிவகங்கை ஆகிய ஆறு மாவட்டங்களில் முதல் கட்டமாக செயல்படுத்தப்பட்டது. 1.4.2007 முதல் இத்திட்டம் தஞ்சாவூர், திருவாரூர், கரூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களுக்கு இரண்டாம் கட்டமாக விரிவுபடுத்தப்பட்டது. 1.4.2008 முதல் இத்திட்டம் தமிழ்நாட்டிலுள்ள இதர அனைத்து 20 மாவட்டங்களில், அதாவது காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, கோயம்புத்தூர், நீலகிரி, திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, மதுரை, தேனி, இராமநாதபுரம், விருதுநகர், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி, மூன்றாம் கட்டமாக விரிவுபடுத்தப்பட்டது.

## அட்டவணை – 10


### தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் விடுவிக்கப்பட்ட நிதி மற்றும் செலவினம்

(ரூபாய் கோடியில்)

| வருடம் | மத்திய அரசு | மாநில அரசு | மொத்தம் | செலவினம் |
|---|---|---|---|---|
| 2005–06 | 65.72 | 7.31 | 73.03 | 3.00 |
| 2006–07 | 170.89 | 18.08 | 188.97 | 151.65 |
| 2007–08 | 516.29 | 57.29 | 573.58 | 517.84 |
| 2008–09 | 1,401.26 | 191.98 | 1,593.24 | 1,005.50 |
| **மொத்தம்** | **2,154.16** | **274.66** | **2,428.82** | **1,677.99** |

**தமிழ்நாடு தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ஏற்பட்ட மொத்த செலவினம் (பிப்ரவரி2006 முதல் மார்ச் 2009வரை)**

**(ரூ. கோடியில்)**




- பிப்ரவரி 2006ல் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் 13.05.2006 வரையில் வெறும் 3 கோடி ரூபாயாக இருந்த செலவினம், ஜனவரி 2007ல் ரூபாய் 111 கோடியாகவும், தற்போது **ரூபாய் 1,677.99 கோடிக்கு** மேலாகவும் உயர்ந்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் **19.94** கோடி மனித நாட்கள் உருவாக்கப்பட்டு, **21,332** பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் பயன்பெறுவோரில், **82** சதவீதம் பெண்கள் ஆவர். மேலும், **59** சதவீதத்தினர் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் குடும்பங்களை சார்ந்த பயனாளிகள் ஆவார்கள். இதனால் ஊரக பகுதிகளில் பெண் தொழிலாளர்களின் ஊதியம் கணிசமாக உயர்ந்துள்ளது. தேசிய அளவில் தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தை சிறப்பாக செயல்படுத்திய சிறந்த 22 மாவட்டங்களில் கடலூர், சிவகங்கை மற்றும் திண்டுக்கல் மாவட்டங்கள் இடம் பெற்றுள்ளன. இதற்கென கடந்த 02.02.2009 அன்று புதுடில்லியில் நடைப்பெற்ற விழாவில் இம் மூன்று மாவட்டங்களும் பரிசுகளை வென்றுள்ளன.. இத்திட்ட செயல்பாட்டிற்கென புதிய பணியிடங்கள் கீழ்க்கண்டவாறு ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## அட்டவணை – 11

### தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் – பணிகளை விரைந்து முடிக்க பணியிடங்கள் அனுமதித்தது

| வ. எண். | பதவியின் பெயர் | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| **மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள்** | | |
| 1. | கண்காணிப்பாளர்கள் (வட்டார வளர்ச்சி அலுவலர் நிலையில்) | 30 |
| 2. | உதவியாளர்கள் | 30 |
| 3. | கணினி உதவியாளர்கள் | 30 |
| **வட்டார வளர்ச்சி அலுவலகங்கள்** | | |
| 4. | துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் | 385 |
| 5. | உதவியாளர்கள் | 385 |
| 6. | கணினி உதவியாளர்கள் | 770 |
| **தொழில் நுட்ப பணியிடங்கள்** | | |
| 7 | உதவி செயற்பொறியாளர்கள் | 32 |
| 8 | உதவிப் பொறியாளர்கள் | 212 |
| 9 | பணிப்பார்வையாளர்கள் | 673 |
| 10 | இளநிலை வரைவு அலுவலர்கள் | 32 |

- **தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை முறையாகவும், விரைவாகவும் செயல்படுத்துவதற்கு கீழ்க்காணும் சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.**

1. அரசாணை நிலை எண்.77 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–1) துறை, நாள்– 14.07.2006 மூலம் இத்திட்டத்திற்கென தனியான ஊரக விலைப்பட்டியல் ஒப்புதலளிக்கப்பட்டு, ஒரு நாளில் 7 மணி நேரம் வேலை செய்த பின்னரும் சட்ட பூர்வமாக குறைந்த பட்ச தினக் கூலியாக நிர்ணயிக்கப்பட்ட ரூ.80/–ஐ பெற இருந்த பணி அளவு தொடர்பான முக்கிய தடையை நீக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது. சிவகங்கை மாவட்டத்தில் அதிக அளவில் சரளைக் கல் பகுதிகள் உள்ளதால் இப்பகுதிகளுக்கென தனி விலைப் பட்டியல் அரசாணை நிலை எண்.35, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள். 12.03.2007 மூலம் வெளியிடப்பட்டது. இத்திட்டத்தில்,

2007–08க்கான ஊரக விலைப்பட்டியல் அரசாணை எண்.101, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ம.அ.தி) துறை, நாள் 13.06.2007–ல் வெளியிடப்பட்டுள்ளது. 2008–09–க்கான ஊரக விலைப்பட்டியல் அரசாணை (நிலை) எண்.110, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–1) துறை, நாள்.27.06.2008–ல் வெளியிடப்பட்டுள்ளது.

2. ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் குறைந்த அளவு 30 சதவீதம் குடும்பங்களை பதிவு செய்திட வலியுறுத்தப்பட்டது. முதல் மற்றும் இரண்டாவது கட்ட மாவட்டங்களில் சராசரி பதிவுகள் 65 சதவிகிதத்தை தாண்டியுள்ளது. மூன்றாவது கட்டமாக செயல்படுத்தப்பட்டுள்ள மாவட்டங்களிலும் சராசரி பதிவுகள் 40 சதவிகிதத்தை கடந்துள்ளது. இது இத்திட்டத்தைப் பற்றிய விழிப்புணர்வு பரவலாக உள்ளது என்பதை தெளிவாக்குகிறது.

3. ஏற்கனவே நடைமுறையில் இருந்த வேலை அடையாள அட்டை மற்றும் தினக்கூலி பணியாளர்கள் வருகைப் பட்டியல், ஆகிய ஆவணங்கள் தெள்ளத் தெளிவாகவும் கூடுதல் விவரங்களுடனும், இத்திட்டம் செயல்படுத்தும்போது விவரங்களை மாற்ற இயலாத வகையிலும் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

4. இத்திட்ட செயல்பாட்டினை முனைப்போடு கண்காணிக்க ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய வாகனத்திற்கும் கூடுதலாக மாதம் 50 லிட்டர் எரிபொருள் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் உதவி செயற்பொறியாளர் (ஊ.வ) வாகனத்திற்கும் கூடுதலாக 75 லிட்டர் எரிபொருள் அனுமதி அளித்து அரசாணை எண்.27 ஊ.வ மற்றும் ஊ (மஅதி.1) துறை நாள் : 20.2.08ல் உத்தரவிடப்பட்டுள்ளது.

5. கிராம ஊராட்சி அளவில் இத்திட்டத்தை முறையாக செயல்படுத்துவதற்கு மக்கள் நலப் பணியாளர்கள் பொறுப்பாக்கப்பட்டுள்ளனர்.

6. இத்திட்டத்தின் முறையான செயல்பாட்டினை உறுதிசெய்யவும், உன்னிப்பாக கண்காணிக்கவும், கிராம ஊராட்சி, வட்டாரம், கோட்டம் மற்றும் மாவட்ட அளவில் கூடுதலாக அமைச்சு பணியாளர்கள், தொழில்நுட்ப பணியாளர்கள் மற்றும் கணினி உதவியாளர்கள் அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டம் தமிழ்நாட்டிலுள்ள இதர 20 மாவட்டங்களுக்கு மூன்றாம் கட்டமாக 1.4.2008 முதல் விரிவுப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, அரசாணை எண்.27, ஊ.வ (ம) ஊ (மஅதி–1) துறை நாள் 20.2.08ல் கூடுதல் நிர்வாகப் பணியாளர்கள் மற்றும் வட்டாரங்களில் உள்ள வாகனங்களுக்கு கூடுதல் எரிபொருள் அனுமதிக்கப்பட்டுள்ளது.

7. தேசிய ஊரக வேலை உறுதி சட்டத்தில், இத்திட்டப்பணிகளில் ஒப்பந்தக்காரர்கள் பயன்பாடு தடைசெய்யப்பட்டுள்ளதால், அவர்கள் நுழைவதை தடுக்க 100 சதவீதம் முழுமையான மனித உழைப்பைக் கொண்டு செய்யப்படும் வேலைகளே மேற்கொள்ளப்படுகின்றன.

8. இத்திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்படும் பணிகள் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு குறையாமல் இருக்க வேண்டுமென பின்வரும் காரணங்களுக்காக வலியுறுத்தப்படுகிறது. i) ஒரே இடத்தில் போதுமான எண்ணிக்கையிலான பணியாளர்களுக்கு குறைந்தபட்சம் 30 நாட்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு. ii) உருவாக்கப்படும் சொத்துக்கள் கண்களுக்கு புலப்படுகின்றதாகவும், நிலைத்திருக்கக் கூடியதாகவும், சமுதாயத்திற்கு பயன்தரத் தக்கதாகவும் இருத்தல். iii) சிறிய பணிகளுக்கு பரவலாக நிதி ஆதாரங்கள் விரயமாவதை தவிர்த்தல். iv) பணிகளை உன்னிப்பாக கண்காணித்தல் மூலம் முறையற்ற செலவினங்களை குறைத்தல்.

9. இத்திட்டத்தின் கீழ் பணிகளில் ஈடுபடும் வேலையாட்களுக்கு ஊதியம் வெளிப்படையாகவும் நியாயமாகவும் வழங்குவதை உறுதி செய்ய, கீழ்க்காணும் குழுவில் இடம் பெற்றுள்ள குறைந்தபட்சம் 4 நபர்களின் முன்னிலையில் தினக் கூலியானது, வழங்கப்பட வேண்டும் என உத்திரவிடப்பட்டுள்ளது.

அ) கிராம ஊராட்சித் தலைவர்,

ஆ) கிராம ஊராட்சி துணைத் தலைவர்,

இ) பணி நடைபெறும் பகுதியின் வார்டு உறுப்பினர்,

ஈ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த வார்டு உறுப்பினர் (வரிசை எண். அ, ஆ மற்றும் இ–ல் குறிப்பிட்டுள்ள நபர்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சார்ந்த நபர் இல்லாதிருப்பின்)

உ) தரம் பிரிக்கப்பட்டுள்ள சுய உதவிக் குழுக்களிலிருந்து இரண்டு ஊக்குநர்கள்,

ஊ) ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பிரதிநிதி.

10. தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் செயல்படுத்தும் மாவட்டங்களில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும், இத்திட்டத்தின் வெளிப்படையான செயலாக்கத்தினை உறுதி செய்யும் பொருட்டு, ஜனவரி 26, மே 1, ஆகஸ்டு 15, அக்டோபர் 2 தினங்களில் நடைபெறும் கிராம சபை கூட்டங்களில் சமூக தணிக்கை செய்ய அரசு ஆணைப்

பிறப்பித்துள்ளது. மேலும் 2008–09ம் ஆண்டிலும் கிராம சபை கூட்டங்களில் இதரப் பணிகளுடன் இத்திட்டத்தினை சமூக தணிக்கைக்கு உட்படுத்த எடுத்துக் கொள்ளப்படும்.

- **பெரியார் நினைவு சமத்துவபுரம் –** சமூக நீதியை மேம்படுத்தவும், சாதி சமயமற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்கவும் மக்கள் ஒற்றுமையுடனும், சகோதரத்துவத்துடனும் வாழ வேண்டும் என்ற தந்தை பெரியார் அவர்களின் செய்தியை பரப்பவும், இந்த அரசு 1997–98 ஆம் ஆண்டு முதல் **145** சமத்துவபுரங்களை அமைத்துள்ளது. இவ்வரசு, மேலும் **95** புதிய சமத்துவபுரங்களை அமைத்து அனைத்து சமூகத்தினரும் சகோதரத்துவத்துடன் ஒருமித்து வாழ்கின்ற அந்த ஒவ்வொரு சமத்துவபுர குடியிருப்பு முகப்பிலும் தந்தை பெரியார் அவர்களின் சிலையை அமைப்பதால், அவருடைய தலையாயக் கொள்கையான சமுதாயச் சமத்துவக் கொள்கை பரவுவதற்கு மேலும் சிறப்பான வழி ஏற்படும் என்பதற்காக அந்தப் பணியை இந்த அரசு தொடங்க முடிவு செய்துள்ளது. முதற்கட்டமாக 2008–09ம் ஆண்டில் அனைத்து மாவட்டங்களிலும் (சென்னை, நீலகிரி மாவட்டங்கள் தவிர) தலா ஒன்று வீதம், **29** சமத்துவபுரங்கள் அமைப்பதற்கும் அரசு முடிவு செய்துள்ளது. ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் **100** வீடுகள், சாலைகள், தெரு விளக்குகள், குடிநீர் வசதிகள் மற்றும் பொது விநியோகக் கடை ஆகிய வசதிகள் ஏற்படுத்தப்படும். சமத்துவப்புரங்கள் அமைப்பதற்கான மொத்த செலவினத்தையும் தமிழ் நாடு அரசு ஏற்றுக்கொள்கிறது. ஒவ்வொரு சமத்துவப்புரம் அமையவுள்ள இடத்திற்கான நிலம் வாங்கப்பட்டு மதிப்பீடுகள் இறுதிசெய்யப்பட்டு, ஒப்பந்தப் புள்ளிகள் முடிவுசெய்யப்பட்டதுடன் அனைத்து வீடுகள் கட்டும் பணிகளும் இதர பணிகளும் இறுதிக் கட்ட முன்னேற்றத்தில் உள்ளது.

- **இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் :** இத்திட்டத்தின் கீழ் புதிய வீடுகளுக்கான கட்டுமானச் செலவுகள் அதிகரித்துள்ளதைக் கருத்தில் கொண்டு, இவ்வீடுகளுக்கான மதிப்பீடு கணிசமான அளவு உயர்த்தப்பட்டுள்ளது,. மைய அரசு அதன் 2008–09–ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் இவ்வீடுகளுக்கான மதிப்பீட்டை, வீடு ஒன்றுக்கு ரூ.25,000–லிருந்து ரூ.35,000/–ஆக உயர்த்தியுள்ளது. இதேபோல, கான்கிரீட் கூரை அமைப்பதற்கான செலவினங்களில் ஏற்பட்டுள்ள உயர்வையும் கருத்தில் கொண்டு, 2008–09–ம் ஆண்டிலிருந்து மாநில அரசு வழங்கும் மானியத்தையும் ரூ.12,000/–லிருந்து ரூ.20,000/–ஆக உயர்த்தி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. மாநில அரசு பங்குத் தொகையுடன் மேலும் கூடுதலாக கான்கிரீட் கூரை அமைப்பதற்காக ஒதுக்கப்படும் நிதியும் அளிக்கப்படுகிறது. ஆகவே, 2008–09 ஆண்டு

முதல் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் சாதாரன மண் பரப்பில் கட்டப்படும் வீடுகளுக்கு அலகுத் தொகை ரூ.55,000/–ஆகவும் கடின மண் பரப்பு / மலைப் பகுதியில் கட்டப்படும் வீடுகளுக்கு அலகுத் தொகை ரூ.58,500/– ஆகவும் இருக்கும். 2008–09ம் ஆண்டு முதல் கச்சாவீடு மேம்பாட்டுக்கு வழங்கப்படும் அலகுத் தொகை ரூ.12,500/–லிருந்து ரூ. 15,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**அட்டவணை – 12**

**இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் – புதிய வீடுகள்**

**(ரூபாய் கோடியில்)**

| ஆண்டு | ஒதுக்கீடு (கான்கிரிட் கூரை உட்பட) | செலவினத் தொகை | செலவினத்தின் சதவிகிதம் | எடுக்கப் பட்டவை | முடிக்கப் பட்டவை | முடிக்கப் பட்டதின் சதவிகிதம் |
|---|---|---|---|---|---|---|
| 2006–07 | 189.79 | 189.21 | 99.99 | 50,380 | 50,380 | 100 |
| 2007–08 | 255.38 | 254.30 | 99 | 68,523 | 68,523 | 100 |
| 2008–09 | 379.33<br>6.63<br>இயற்கை இடர்பாடுகள் | 376.06.15<br>0.93 | 99<br>14 | 68,509<br>1,205 | 58,669 | 86 |
| | 335.06<br>கூடுதல் ஒதுக்கீடு | 66.93 | 21 | 60,919 | 25 | 1 |

**அட்டவணை – 13**

**இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் – கச்சா வீடுகள்**

**(ரூபாய் கோடியில்)**

| வருடம் | ஒதுக்கீடு | செலவினம் தொகை | செலவினத்தின் சதவிகிதம் | எடுக்கப்பட்டவை | முடிக்கப்பட்டவை | முடிக்கப்பட்டத்தின் சதவிகிதம் |
|---|---|---|---|---|---|---|
| 2006–07 | 14.47 | 14.47 | 100 | 11,077 | 11,077 | 100 |
| 2007–08 | 19.23 | 19.23 | 100 | 15,384 | 15,384 | 100 |
| 2008–09 | 23.69<br>கூடுதல் ஒதுக்கீடு | 6.75 | 29 | 15,794 | 204 | 2 |

- **ஊராட்சி ஒன்றிய பள்ளி சீரமைப்புத் திட்டம் :** இத்திட்டத்தின் கீழ் பல ஆண்டுகளாக இம்மாநிலத்தில் பராமரிப்பின்றி பழுதடைந்த நிலையிலுள்ள சுமார் 22,000 ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிகள் மற்றும் 4,500 நடுநிலைப் பள்ளிகளில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது. அதன்படி, இதுவரை 2007– 08ம் ஆண்டில், **ரூ.104.25** கோடி மதிப்பீட்டில் சுமார் **9,547** பள்ளிகள் பராமரிப்பிற்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இதேபோன்று **2008–2009**ம் ஆண்டில் **69.30** கோடி ரூபாய் மதிப்பீட்டில், சுமார் **4,432** பள்ளிகளில் பராமரிப்புப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தின் கீழ் ரூ.**14.34** கோடி மதிப்பீட்டில், மூன்றாம் நிலை நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் பகுதிகளில் உள்ள **495** ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பராமரிப்புப் பணிகளும், **248** கழிப்பறைகள் கட்டுவதற்கும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

**அட்டவணை – 14**

**ஊராட்சி ஒன்றிய பள்ளி சீரமைப்புத் திட்டம்**

**(ரூபாய் கோடியில்)**

| வருடம் | ஒதுக்கீடு | செலவினம் தொகை | செலவினத்தின் சதவிகிதம் | எடுக்கப்பட்டவை | முடிக்கப்பட்டவை | முடிக்கப்பட்டத்தின் சதவிகிதம் |
|---|---|---|---|---|---|---|
| 2006–07 & 2007–08 | 104.25 | 102.30 | 98 | 9,547 | 9,547 | 100 |
| 2008–09 | 69.30 | 52.70 | 76 | 4,432 | 3,935 | 89 |

- **நமக்கு நாமே திட்டம் : 2007–08ம்** ஆண்டு முதல் நமக்கு நாமே திட்டத்தை மீண்டும் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. வளர்ச்சிப் பணிகளை பொது மக்களின் பங்களிப்போடு, திட்டமிடுதல், செயல்படுத்துதல் மற்றும் சொத்துக்களை பராமரித்தல் போன்றவற்றில் அவர்களை ஈடுபடுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். 2008–09ம் ஆண்டில் இத் திட்டத்தை செயல்படுத்த ரூ 50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் செயல்படுத்தப்படுகிறது.

## அட்டவணை – 15

## நமக்கு நாமே திட்டம்

**(ரூபாய் கோடியில்)**

| வருடம் | ஒதுக் கீடு | மக்களின் பங்க ளிப்பு | செலவி தொ கை | செலவி னத்தின் சதவிகிதம் | எடுக்கப் பட்டவை | முடிக்கப்பட் டவை | முடிக்கப்பட் டத்தின் சதவிகிதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2007–08 | 50.00 | 24.01 | 56 | 100 | 1,894 | 1,859 | 98 |
| 2008–09 | 50.00 | 30.86 | 36 | 72 | 2,622 | 1,499 | 57 |

- **ஊரக கட்டமைப்பு திட்டம்** 1.4.2008 முதல் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டதால், சம்பூர்ண கிராம வேலை வாய்ப்பு திட்டம் மத்திய அரசால் கைவிடப்பட்டுள்ளது. இதன் விளைவாக, சிறு கட்டிடங்கள், சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் போன்ற கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு தற்போது சரியான திட்டம் ஏதும் இல்லை. மேலும் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட சொத்துக்களை நிலைபடுத்துவதும், அவைகளை நீடித்து நிலைத்திருக்க கூடியதாக மாற்றுவதும் அவசியமாகிறது. எனவே 2008–09ம் ஆண்டு ஊரக கட்டமைப்பு திட்டம் என்ற புதிய திட்டம் ரூ.350.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிதி, கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்காக ஒதுக்கப்படும் மாநில நிதி ஆணைய மான்யத்திலிருந்து, 4:2:1 என்ற விகிதத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். மேற்படி ஒதுக்கீட்டு தொகை ரூ. 350 கோடியில், செப்டம்பர் 2008 முடிய ரூ.350 கோடி மாவட்டங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் **33,705** பணிகள் எடுக்கப்பட்டு இதுவரை **29,145** பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

## அட்டவணை–16

**ஊரக கட்டமைப்பு திட்டம் – பணி வாரியான முன்னேற்ற அறிக்கை 2008–09**

| பணியின் பெயர் | எடுக்கப்பட்டது | முடிக்கப்பட்டது |
|---|---|---|
| சிமெண்ட் சாலை எண்ணிக்கை / கி.மீ | 20,479/1,604.41 | 18,872/1,446.33 |
| தார்ச்சாலை எண்ணிக்கை / கி.மீ | 1,854/529.95 | 1,445/382.60 |
| மயான கூடம் | 312 | 214 |
| தெரு விளக்குகள் | 2,533 | 2,496 |
| கட்டிடப் பணிகள் | 962 | 404 |
| இதர பணிகள் | 7,565 | 5,714 |
| **மொத்தம்** | **33,705** | **29,145** |

- **சாலைகள்: 13.05.2006க்கு** பிறகு பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம், நபார்டு ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி XII & XIII, XIV , XV மற்றும் 12வது நிதிக்குழு மானியத்தின் கீழ், **2,796.91** கோடி ரூபாய் மதிப்பீட்டில் **19,527.77** கி.மீ. நீளமுள்ள சாலைப்பணிகள் கீழ்க்கண்டவாறு எடுக்கப்பட்டுள்ளன. இதில் 2008–09ம் ஆண்டு பிரதம மந்திரி கிராமச் சாலைகள் பகுதி – VII ல் **ரூ.859** கோடி மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்ட 3,032 கி.மீ நீளமுள்ள சாலைப் பணிகளும் அடங்கும்.

**அட்டவணை – 17**

**சாலைப் பணிகள் – திட்டப் பணிகள் வாரியான முன்னேற்ற அறிக்கை**

| வ. எண். | திட்டம் | மதிப்பீடு (ரூபாய் கோடியில்) | எடுக்கப்பட்டவை | | முடிக்கப்பட்டவை | |
|---|---|---|---|---|---|---|
| | | | எண்ணிக்கை | கி.மீ. | எண்ணிக்கை | கி.மீ. |
| 1. | பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம் பகுதி V | 182.05 | 364 | 792.41 | 348 | 736.56 |
| 2. | பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம் பகுதி VI | 466.00 | 818 | 2,082.54 | 35 | 104.66 |
| 3. | பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம் பகுதி VII | 859.00 | 1,591 | 3,032.00 | | |
| 4. | நபார்டு XII | 124.81 | 854 | 1,486.30 | 854 | 1,486.30 |
| 5. | நபார்டு XIII | 439.67 | 1,407 | 3,720.50 | 1,173 | 3,056.02 |
| 6. | நபார்டு XIV | 414.58 | 1,244 | 3,204.80 | 26 | 55.58 |
| 7. | 12–வது நிதிக் குழு மானியம் 2006–07 | 103.60 | 1,462 | 1,897.35 | 1,462 | 1,897.35 |
| 8. | 12–வது நிதிக் குழு மானியம் (2007–08) | 103.60 | 1,460 | 1,801.16 | 1,460 | 1,801.16 |
| 9. | 12–வது நிதிக் குழு மானியம் 2008–09 | 103.60 | 1,125 | 1,510.71 | 846 | 1,095.22 |

- **சிமெண்ட்:** ஊரக வளர்ச்சிப் பணிகளை செயல்படுத்த சிமெண்ட் இன்றியமையாததாகும். 2007–08 லிருந்து ஏற்பட்டுள்ள சிமெண்ட் பற்றாக்குறையினால், ஊரக வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவது மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, தனியார் நிறுவனங்களிலிருந்து, டான்சம் நிறுவனம் மூலம் சிமெண்ட் கொள்முதல் செய்ய முடிவு செய்யப்பட்டது. அதன்படி, ஒரு மூட்டை சிமெண்ட் ரூ.250 முதல் ரூ.260 வரை வெளிச்

சந்தையில் விற்கும் நிலையில், தனியார் நிறு வனங்கள், மூட்டை ஒன்றுக்கு 220 ரூபாய் வீதம் ஊரக வளர்ச்சித் துறை பணிகளுக்கு விற்பனை செய்ய சம்மதம் தெரிவித்துள்ளன. இதன்படி 2008–09 ம் ஆண்டு ஊரக வளர்ச்சித் துறைப் பணிகளுக்கு இதே விலையில் சிமெண்ட் பெறப்பட்டு வருகிறது.

- **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்ட** நிதி 2008–09ம் ஆண்டு முதல் ரூபாய் **1.20** கோடியிலிருந்து ரூபாய் **1 கோடியே 50 லட்சமாக** உயர்த்தப்பட்டுள்ளது.

**அட்டவணை – 18**

**சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்ட நிதி**

**(ரூபாய் கோடியில்)**

| ஆண்டு | ஒதுக்கீடு | செலவினம் | செலவின சதவிகிதம் | எடுக்கப்பட்ட பணிகள் | முடிக்கப்பட்ட பணிகள் சதவிகிதம் | முடிக்கப்பட்ட பணிகள் |
|---|---|---|---|---|---|---|
| 2006–07 | 282 | 269 | 95 | 59,753 | 59,746 | 99.99 |
| 2007–08 | 282 | 281 | 99 | 25,917 | 25,831 | 99 |
| 2008–09 | 325.50 | 222 | 68 | 28,710 | 23,365 | 81 |

- **முழு சுகாதார இயக்கம் –** கடந்த 2006–07ல் 296 கிராம ஊராட்சிகளே நிர்மல் கிராம் புரஸ்கார் விருதுகள் பெற்றன 2007–08 ம் ஆண்டில் திருப்திகரமான செயல்பாட்டினால், **1,474** கிராம ஊராட்சிகள் மற்றும் 5 வட்டார ஊராட்சிகள் (கன்னியாகுமரி மாவட்டத்தில் திருவட்டாறு, முன்சிரை, கிள்ளியூர் & தக்களை மற்றும் திருச்சி மாவட்டத்தில் உள்ள தாத்தையங்கார்பேட்டை வட்டாரம்) நிர்மல் கிராம் புரஸ்கார் விருதுகள் பெற்று அதிக எண்ணிக்கையில் நிர்மல் கிராம் புரஸ்கார் விருதுகள் பெற்று தமிழ்நாடு இந்திய அளவில் இரண்டாவது இடம் பெற்றுள்ளது.

- மத்திய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட செயலாக்கத் துறை அமைச்சகத்தின் இணையதளத்தின்படி (Website) **பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியினை** பயன்படுத்துவதில் 98.95 சதவிகிதம் செலவினம் மேற்கொண்டு இந்திய அளவில் தமிழ் நாடு 1993 முதல் தொடர்ந்து முதல் இடத்தில் உள்ளது.

## அட்டவணை – 19

## பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதி

**(ரூபாய் கோடியில்)**

| ஆண்டு | ஒதுக்கீடு | செலவினம் | செலவின சதவிகிதம் | எடுக்கப் பட்ட பணி களின் எண்ணிக்கை | முடிக்கப்பட்ட பணி களின் எண்ணிக்கை | முடிக்கப்பட்ட பணிகளின் சதவிகிதம் |
|---|---|---|---|---|---|---|
| 2006–07 | 114 | 110 | 96 | 4,208 | 4,206 | 99.80 |
| 2007–08 | 114 | 113 | 98 | 3,880 | 3,840 | 99 |
| 2008–09 | 114 | 64 | 54 | 4,325 | 3,096 | 72 |

- **பிற்படுத்தப்பட்ட தொகுதிகளுக்கான மான்ய நிதி :** தமிழ்நாட்டிலுள்ள 5 பிற்படுத்தப்பட்ட மாவட்டங்களில் மத்திய திட்டக்குழுவால் செயல்படுத்தப்பட்ட ராக்ஷ்டீரிய சம்விகாஸ் யோஜனா மத்திய ஊராட்சித் துறை அமைச்சகத்திற்கு மாற்றப்பட்டு அத்திட்டம் பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான மான்யநிதி என பெயர் மாற்றம் செய்யப்பட்டு செயல்படுத்தப்படுகிறது, இத்திட்டம் பல்வேறு பகுதிகளின் வளர்ச்சியில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை சரிசெய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் செயல் திறன் (மற்றும்) தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அத்தியாவசியமான பணிகளை உள்ளாட்சி நிறுவனங்கள் சிறப்பாக மேற்கொள்வதில் வல்லுநர்களின் உதவியுடன் செயல்ரீதியாக சிறப்பாக நடைமுறைபடுத்தவும் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

  மேற்கூறிய கோட்பாடுகளின் அடிப்படையில் தமிழ்நாட்டிலுள்ள 6 பின்தங்கிய மாவட்டங்களின் (ஏற்கனவே ராக்ஷ்டீரிய சாம்விகாஸ் யோஜனா திட்டம் செயல்படுத்தப்பட்ட கடலூர், நாகப்பட்டினம், திருவண்ணாமலை, சிவகங்கை மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களும், கூடுதலாக விழுப்புரம் மாவட்டமும்) செயல் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அவை சம்பந்தப்பட்ட மாவட்ட திட்டக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு பின்னர் அத்திட்டங்கள் மாநில அளவில் உள்ள அதிகாரம் கொண்ட குழுவினால் பரிந்துரைக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. மத்திய அரசு மேற்கண்ட 6 மாவட்டங்களில் 2007–08ம் ஆண்டுக்கான செயல் திட்டங்களையும் அதற்கான நிதி ஒதுக்கீட்டையும் 2008–09ம் நிதியாண்டில் கீழ்க்கண்டவாறு அனுமதித்துள்ளது.

## அட்டவணை –20

### பிற்படுத்தப்பட்ட தொகுதிகளுக்கான மான்ய நிதி விடுவித்த விவரம்

(ரூ.கோடியில்)

| வ.எண் | மாவட்டம் | தொகை |
|---|---|---|
| 1 | நாகப்பட்டினம் | 13.55 |
| 2 | சிவகங்கை | 13.96 |
| 3 | விழுப்புரம் | 19.55 |
| 4 | திருவண்ணாமலை | 17.34 |
| 5 | திண்டுக்கல் | 16.83 |
| 6 | கடலூர் | 15.98 |
| | **மொத்தம்** | **97.21** |

## III. பணியாளர் நலன்

- உதவி இயக்குநர் முதல் மக்கள் நலப்பணியாளர்கள் வரை இருந்த அனைத்து காலிப் பணியிடங்களையும் கண்டறிந்து அவற்றை நிரப்பிட அரசாணைகள் வழங்கிய **முதல் துறை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையே ஆகும். 17,819** காலிப்பணியிடங்களை நிரப்பிட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, அவற்றில் **16,457** காலிப்பணியிடங்கள் இதுவரை நிரப்பப்பட்டுள்ளன. மீதமுள்ள **1,362** காலிப்பணியிடங்களை தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் / வேலை வாய்ப்பகம் மூலம் விரைவில் நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- **ஊரக வளர்ச்சித் துறையின் தொழில் நுட்பப் பிரிவை வலுவூட்டுதல் –** அரசு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 2006–07ம் ஆண்டுக்கு 223 உதவிப் பொறியாளர்களை (ஊரக வளர்ச்சி) தேர்வு செய்யக்கேட்டுக்கொண்டது. அதன்**படி 218 பொறியாளர்கள்** அடங்கிய முதல் பெயர் பட்டியல் பெறப்பட்டு அவர்களுக்கு நியமன உத்தரவுகள் வழங்கப்பட்டது. அதில் 184 உதவிப் பொறியாளர்கள் (ஊரக வளர்ச்சி) மாவட்டங்களில் பணியேற்றுள்ளனர். மேலும் 2007–08ம் ஆண்டுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 264 உதவி பொறியாளர்களை (ஊரக வளர்ச்சி) தேர்வு செய்ய அரசு கேட்டுக் கொண்டுள்ளது

## அட்டவணை – 21

## 31.5.2006க்கு பிறகு நிரப்பப்பட்ட பணிகள்

| வ.எண் | பதவியின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பணி மேற்பார்வையாளர்கள் | **1,109** |
| 2 | இளநிலை வரைவு அலுவலர்கள் | **95** |
| 3 | சாலை ஆய்வாளர்கள் | **575** |
| 4 | உதவிப் பொறியாளர்கள் | **184** |
| 5 | இளநிலை பொறியாளர்கள்<br>(அ) சுனாமி திட்ட செயலாக்க அலகு<br>(ஆ) தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் | <br>**62**<br>**53** |
| 6 | உதவி செயற் பொறியாளர்கள்<br>(அ) சுனாமி திட்ட செயலாக்க அலகு<br>(ஆ) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி உப கோட்டம்<br>(இ) தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் | <br>**34**<br>**91**<br>**32** |
| | **மொத்தம்** | **2,235** |

- **வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி)க்கு ஊதியம் வழங்கும் தற்சார்பு அலுவலராக அதிகாரம் வழங்குதல் :** அரசு ஆணை எண். 141, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை நாள் 9.8.07ன் வழி தமிழ்நாடு அரசு ஒரு முக்கிய முடிவினை மேற்கொண்டதன் மூலம், வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி)யைப் போல் கருவூலத்திலிருந்து ஊதியம் மற்றும் இதர சில்லறை செலவினங்களை மேற்கொள்ளுவது போன்று, வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) களும் தங்களின் கீழ் பணிபுரியும் அலுவலர்களுக்கு, செலவினங்களை மேற்கொள்ளவும் தனித் தனியே அலுவலகத் தலைவர்களாக சுதந்திரமாக செயல்பட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு (கிராம ஊராட்சி) நிதியை கையாளும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதால் அவர் கீழ் பணிபுரியும் பணியாளர்களுக்கு அலுவலராக சுதந்திரமாக செயல்பட வழி ஏற்படுத்தப்பட்டு உள்ளது.

- **துணை வட்டார வளர்ச்சி அலுவலர் நிலை உயர்த்துதல் :** அரசாணை (நிலை) எண் 138 / ஊ.வ (ம) ஊ.துறை /2008 நாள் 28.8.2008–ன்படி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 2,544 விரிவாக்க அலுவலர் பணியிடங்கள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பணியிடங்களாக நிலை உயர்த்தப்பட்டுள்ளது.

- **இரவுக் காவலர், அலுவலக உதவியாளர் மற்றும் அதற்கு இணையான பதவிகளில் ஏற்படும் காலி பணியிடங்குள்ளு மக்கள் நலப் பணியாளர்களுக்கு பதவி அளித்தல்** – மான்புமிகு ஊரக மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் 16.04.2008 அன்று நிதிநிலை அறிக்கையில், அலுவலக உதவியாளர், இரவுக் காவலர் மற்றும் அதற்கு இணையான பதவிகளில் ஏற்படும் காலி பணியிடங்களில் 50 சதவிகிதம் **மக்கள் நலப் பணியாளர்களை** எடுத்துக் கொள்ளுதல் குறித்து அரசாணை எண் 179 ஊ.வ மற்றும் ஊராட்சித் துறை நாள் 27.11.2008 ல் வெளியிடப்பட்டுள்ளது. இது வரை, 157 அலுவலக உதவியாளர் பணியிடங்களும்,16 இரவுக் காவலர் பணியிடங்களும் மக்கள் நலப் பணியாளர்களைக் கொண்டு நிரப்பப்பட்டுள்ளன.

- **ஊராட்சி ஒன்றிய தலைவர்களின் ஈப்புகளுக்கு புதிய ஓட்டுநர் பதவி யிடங்கள் தோற்றுவித்தல் –** ஊராட்சி ஒன்றிய தலைவர்களின் ஈப்புகளுக்கு 385 புதிய ஓட்டுநர் பணியிடங்கள் அனுமதித்து அப்பணியிடங்களை நிரப்பிட அரசாணை எண் 67 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ5) துறை நாள் 12.05.2008 வெளியிடப்பட்டுள்ளது. 385 ஓட்டுநர் பணியிடங்களில் இதுவரை 382 ஓட்டுநர் பணியிடங்கள் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமும் மற்றும் பதிவறை எழுத்தர்/அலுவலக உதவியாளர்களின் பதவி உயர்வின் மூலம் நிரப்பப்பட்டுள்ளன.

- **இடைக்கால போனஸ் உயர்வு –** மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி / விசைபம்பு இயக்குபவர், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் மக்கள் நலப் பணியாளர்களுக்கு 2007–08 ல் இடைக்கால போனஸ் தொகை ரூபாய் 300/– லிருந்து ரூபாய் 1,000/– மாக உயர்த்தி வழங்கிட அரசாணை எண். 2(2டி) ஊரக வளர்ச்சி ஊராட்சித் துறை, நாள் 12.01.2009ல் வெளியிடப்பட்டது.

## IV. பொது

- **புதிய வாகனங்கள் – 2007–08**ஆம் ஆண்டு பகுதி – 2 திட்டத்தின் கீழ் , வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி செயற்பொறியாளர்கள், உதவி இயக்குநர்கள் (ஊராட்சி), உதவி இயக்குநர்கள் (தணிக்கை) ஆகியோர்களுக்கு 121 புதிய ஈப்புகள் வழங்கப்பட்டுள்ளது. 2007–

08ம் ஆண்டு, ஒருமுகப்படுத்தப்பட்ட, ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்ட கூறு நிதியிலிருந்து ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு **385** புதிய வாகனங்களும், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் புதியதாக தோற்றுவிக்கப்பட்ட உட்கோட்ட உதவி செயற்பொறியாளர்களுக்கு **409** வாகனங்களும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், பகுதி – II திட்டத்தின்கீழ் 24 புதிய ஈப்புகள் வாங்கிட ரூ. 112.50 இலட்சம் நிதி பயன்படுத்தப்பட்டுள்ளது..

- **பகுதி 2 திட்டத்தின் கீழ் 2007–08ம்** ஆண்டில் அனைத்து ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் மற்றும் உதவி இயக்குநர் (தணிக்கை) அலுவலகங்களுக்கு 416 படிப்பெருக்கிகள் மற்றும் 385 நிகரி இயந்திரங்கள் வாங்கப்பட்டுள்ளது.

- **2008–09ம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின் கீழ்** ரூ.43.50 லட்சம் மதிப்பீட்டில் 29 மாவட்டத்தில் உள்ள மாவட்ட ஆட்சியரக ஊரக வளர்ச்சிப் பிரிவு அலுவலகங்களுக்கு தலா 3 கணினிகள் வீதம் கூடுதல் கணினிகள் மற்றும் இதர உபபொருட்கள் வாங்க அரசு அனுமதித்துள்ளது. 2008–09 பகுதி – 2 திட்டத்தின் கீழ் ரூ 4.64 லட்சம் மதிப்பீட்டில், மாவட்டத்தில் உள்ள உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகங்களுக்கு 29 நிகரி இயந்திரங்கள் வாங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கணினிகள் மற்றும் நிகரி இயந்திரங்கள் வாங்கி வழங்கப்பட்டுள்ளது..

**பயிற்சி நிறுவனங்களை நவீனப்படுத்துதல்** மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்கள் சிறப்பான பயிற்சிகளை நடத்திட அதன் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டியது அவசியமாகிறது. எனவே 5 மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களுக்கும் 2007–08ம் ஆண்டில் பகுதி II திட்டத்தின் கீழ் அரசு ரூ 1.00கோடி நிதி ஒதுக்கீட்டை அனுமதித்து வகுப்பறை, சமையலறை மற்றும் விடுதிகளை மேம்படுத்திட ஆணையிட்டுள்ளது. மேலும் ஒவ்வொரு மண்டல ஊரக பயிற்சி நிறுவனங்களுக்கும் நிகரி இயந்திரம் வாங்கிட 1.25 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும் விடுதிக் கட்டடங்கள் போதிய வசதிகள் இல்லாததால் பகுதி 2 திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பயிற்சி நிறுவனத்திற்கும் நவீன சமையலறையுடன் கூடிய புதிய விடுதிக் கட்டடங்களைக் கட்ட தலா ரூ **50.00** இலட்சம் அனுமதித்துள்ளது. மேலும் 5 மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களுக்கும் மரச் சாமான்கள், படுக்கை மற்றம் சமையலறைப் பாத்திரங்கள் இவற்றை புதுப்பிப்பதற்காக பகுதி திட்டம் II ன் கீழ் 2008–09ல் ரூ, 1.00 கோடியை அரசு அனுமதித்துள்ளது.

தமிழ் நாடு மகளிர்  நல மேம்பாட்டு நிறுவனம்

**1. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சீரமைப்பு மற்றும் வலுப்படுத்துதல்:**

மகளிர் சுய உதவிக்குழு மேம்பாட்டிற்கான திட்டங்களின் செயல்பாட்டில் ஒருங்கிணைப்பு கொண்டுவரும் விதமாக தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் சூலை 2006 முதல் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. பல்வேறு கள வல்லுனர்களை உள்ளடக்கும் வண்ணம் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன ஆளுமைக்குழு திருத்தியமைக்கப்பட்டு விரிவாக்கப்பட்டது.

சிறந்த வகையில் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ள ஏதுவாக தலைமை அலுவலகத்தில் மூன்று கூடுதல் இயக்குனர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டன. மாவட்ட அளவில் கண்காணிப்பு அமைப்பை வலுப்படுத்தும் வகையில் வெளிச்சந்தையிருந்து 60 உதவி திட்ட அலுவலர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டனர். மகளிர் திட்ட செயல்பாட்டை மேற்பார்வையிடவும் கண்காணிக்கவும் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி), துணை வட்டார வளர்ச்சி அலுவலர், விரிவாக்க அலுவலர் (ஆதி திராவிடர் நலன்) மற்றும் ஊர் நல அலுவலர்களை ஈடுபடுத்த அரசு ஆணை எண் 106, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை நாள் 20.06.07–ல் உத்தரவிடப்பட்டது.

- வட்டார அளவில் சுய உதவிக் குழுக்கான திட்ட செயலாக்கத்தை மேலும் வலுப்படுத்த 2008–09 ஆம் ஆண்டில் மகளிர் திட்டம் மற்றும் பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்பு திட்ட பணிகள் துணை வட்டார வளர்ச்சி அலுவலருக்கு (தணிக்கை) பதிலாக துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (சிறு சேமிப்பு மற்றும் பொது தொடர்புக்கு), மாற்றம் செய்து அரசு ஆணை எண் 188, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை நாள் 22.12.2008–ல் உத்தரவிடப்பட்டது.

**2. மகளிர் திட்டம்:**

மகளிர் திட்டத்தின் கீழ் 30.04.2009 வரை 63 லட்சம் மகளிரை உறுப்பினராக கொண்ட 3,91,927 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு உள்ளன. இவர்களின் மொத்த சேமிப்பு ரூபாய் 2211.12 கோடி ஆகும். இவற்றுள் 12,07,888 மகளிரை உறுப்பினராக கொண்ட 75,493 புதிய சுய உதவிக் குழுக்கள் சூலை 2006 க்குப்பின் உருவாக்கப்பட்டன.

- 2008 – 09 ம் ஆண்டில் ஏழை மகளிர் மற்றும் சுய உதவிக் குழு இயக்கத்தில் விடுப்பட்டுள்ள மகளிருக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. எனவே 25% மற்றும் 50% க்கும் குறைவாக மகளிர் சுய உதவிக் குழுக்கள் உறுப்பினர்களாக உள்ள கூடுதல்

முன்னுரிமை ஊராட்சிகள் மற்றும் முன்னுரிமை ஊராட்சிகளில் மட்டும் புதிதாக குழுக்கள் அமைக்கப்பட்டன.

- முதலாவது மற்றும் இரண்டாவது கட்டமாக தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் நிறைவேற்றப்படும் மாவட்டங்களில் இது வரை சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களாக இல்லாத தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் வேலை செய்த மகளிரைக் கொண்டு மட்டும் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

- நகர் புறங்களில், குடிசை பகுதியில் மட்டும் புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

- மேற்கூறப்பட்ட முறைகளின் அடிப்படையில் 2008–09 ஆம் ஆண்டு 25,000 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

**3. கடன் இணைப்பு :**

30.04.2009 அன்றைய அளவில் சுய உதவிக் குழுக்களுக்கு 1989 ம் ஆண்டுமுதல் ரூபாய் 5332.84 கோடி வங்கிக்கடனாக வழங்கப்பட்டுள்ளது. இதில் ரூபாய் 3572.72 கோடி சூன் 2006 க்குப் பின் வழங்கப்பட்டுள்ளது.

ஊரக பகுதிகளில் கடன் சுமையினை குறைக்கும் நோக்கில் 2008–09 ஆம் ஆண்டு சுய உதவிக் குழுக்களுக்கு போதுமான கடன் வசதி வங்கிகள் மூலம் கிடைக்க அரசு முன்னுரிமை வழங்கியது.

- 12.04.2008 அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் அனைத்து வங்கி தலைவர்கள் கூட்டத்தினை நடத்தி அதில் 2008–09 ஆம் ஆண்டு சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 1600 கோடி கடன் வழங்க முடிவு செய்யப்பட்டது. மேலும் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் இணைப்பு வழங்கும் போது கடன் தொகையினை உயர்த்தி வழங்கவும் முடிவு செய்யப்பட்டது.

- அரசின் முயற்சியினால் 25.03.2008 அன்று கூடிய மாநில அளவிலான வங்கியாளர்களின் குழுமம் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் இணைப்பு வழங்கும் போது மானியம் நீங்கலாக கீழ்கண்ட அளவு கடன் தொகையினை பின்பற்ற வங்கிகளுக்கு ஆலோசனை வழங்கியது.

| | | |
|---|---|---|
| முதல் இணைப்பு | : | சுய உதவிக் குழு ஒன்றிற்கு ரூ.50,000 |
| இரண்டாவது இணைப்பு | : | சுய உதவிக் குழு ஒன்றிற்கு ரூ.1,00,000 |
| மூன்றாவது இணைப்பு | : | சுய உதவிக் குழு ஒன்றிற்கு ரூ.1,50,000 |
| நான்காவது மற்றும் பிந்தைய கடன் இணைப்புகள் | : | சுய உதவிக் குழுக்களின் தேவையின் அடிப்படையில் உயர்ந்த தொகை |

- மாநிலத்தின் வரலாற்றில் முதன் முறையாக சுய உதவிக் குழுக்களுக்கு கடன் இணைப்பு வழங்க மாநில அளவில் நிதி இலக்கு நிர்ணயிக்கப்பட்டு முறையாக கண்காணிக்கப்பட்டது.

- சுய உதவிக் குழு இயக்கம் ஆரம்பம் முதல் 2007–08 ஆம் ஆண்டு வரை ரூ.3,158.27 கோடி வங்கிகள் மூலம் மொத்த கடனாக வழங்கப்பட்டுள்ளது. ஆனால் 2008–09 ஆம் ஆண்டு மட்டும் ரூ.2,174.57 கோடி சுய உதவிக் குழுக்களுக்கு கடனாக வங்கிகளால் வழங்கப்பட்டுள்ளது.

**4. சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி:**

பொதுவாக ஊரகப்பகுதிகளில் உள்ள சுய உதவிக் குழுக்களுக்கு மட்டுமே சுழல் நிதி மானியம் வழங்கப்பட்டு வந்ததால், நகர்ப்புற சுய உதவிக் குழுக்கள் வங்கிக்கடன் இணைப்பு பெறுவதில் சிரமங்கள் இருந்தன. எனவே அரசு 2006–07 ஆம் ஆண்டு முதல் நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கும் சுழல் நிதி வழங்கும் திட்டத்தினை அறிவித்தது. இரண்டு வருடங்களில் 30,000 சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 30 கோடி சுழல் நிதி மானியமாக வழங்கப்பட்டது.

- பொதுவாக ஒரு ஆண்டில் 25,000 முதல் 30,000 வரை சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி அனுமதிக்கப்பட்டது. ஆனால் 2008 – 09 ம் ஆண்டு இதுவரை சுழல் நிதி பெறாத தகுதி வாய்ந்த 1.50 சுய உதவிக் குழுக்களுக்கும் சுழல் நிதி மானியம் வழங்க அரசு தீர்மானித்தது.

- அனைத்து தகுதியான சுய உதவிக் குழுக்களுக்கும் சுழல் நிதி மானியம் வழங்கும் வண்ணம் ரூ.150 கோடியினை அரசு அனுமதித்தது. 31.03.2009 அன்றைய நிலையில் 1,31,413 சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக்கடனுடன் கூடிய சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது.

**5. பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம்:**

சுய உதவிக்குழுக்களுக்கான திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்தும் வகையில் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டதினை செயல்படுத்தும் பொறுப்பு 1.04.2008 முதல் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 2006 –07 மற்றும் 2007–08 ம் ஆண்டில் 37,587 சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 37.55 கோடி சுழல் நிதி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. தொழில் நடவடிக்கைகளை மேம்படுத்தும் வகையில் 9,217 சுய உதவிக் குழுக்கள் தொழில் தொடங்க ரூபாய் 89.11 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

- 2008–09 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூபாய் 125 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் ரூபாய் 56 கோடி 56,000 சுய உதவிக்குழுக்களுக்கு சுழல்நிதி மான்யம் வழங்கப்பட்டுள்ளது. 4,772 சுய உதவிக் குழுக்களுக்கு தொழில் கடன் ரூ. 50 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**6. பயிற்சித் தொகை:**

- 2006–07 ஆம் ஆண்டில், உறுப்பினர் பயிற்சியில் கலந்து கொள்ளும் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு ஒரு நாளைக்கு அளிக்கப்படும் பயிற்சித்தொகை ரூ.7.50 லிருந்து ரூ.45 ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.
- அதே போல் ஊக்குனர் மற்றும் பிரதிநிதிகளுக்கான பயிற்சியில் பயிற்சியில் கலந்து கொள்ளும் பயிற்சியாளர்களுக்கு ஒரு நாளைக்கு அளிக்கப்படும் பயிற்சித்தொகை ரூபாய் 20 லிருந்து ரூபாய் 45 ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

**7. தொண்டு நிறுவனங்களுக்கு அங்கீகாரம் அளித்தல்:**

மகளிர் திட்ட செயலாக்கத்தில் முக்கிய அங்கம் வகிக்கும் தொண்டு நிறுவனங்களுக்கான அங்கீகார விதிமுறைகள் மற்றும் ஒப்பந்தங்கள் திருத்தப்பட்டு அந்நிறுனங்களின் செயல்பாட்டுத்திறனுக்கும் முக்கியத்துவம் அளிக்கும் வகையில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

- புதிய விதிகளின் கீழ் தொண்டு நிறுவனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு 2008–09 ஆண்டு முதல் 438 நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

## 8. ஊராட்சி அளவிலான சுய உதவிக்குழுக்களின் கூட்டமைப்பை வலுப்படுத்துதல்:

2006 –07 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

- சிறப்பாக செயல்படும் 6912 கூட்டமைப்புகளுக்கு ஆதார நிதியாக தலா ரூபாய் 10.000/ – வழங்கப்பட்டுள்ளது.
- தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் குழு அமைப்பு நிதி, கண்காணிப்பு மற்றும் பயிற்சித் தொகை பெறுவதற்கு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் சான்று அவசியம் என வலியுறுத்தப்பட்டுள்ளது.
- சிறப்பாக செயல்படும் கூட்டமைப்புகள், தொண்டு நிறுவனங்களுக்கு இணையாக மகளிர் திட்டத்தில் இணைந்து புதிய குழு அமைத்தல் மற்றும் பராமரிப்பு பணிகளை செய்ய அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அனைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளையும் மறுசீரமைக்க அரசு தீர்மானித்து 2008–09 ஆம் ஆண்டு கீழ் கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

- ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் அனைத்து தரப்பு மக்களையும் உள்ளடக்கி சனநாயக முறையில் அனைவரின் பங்கேற்புடன் செயல்படும் வகையிலும் அதன் நிர்வாகம் மற்றும் நிலைத்த தன்மையினை மேம்படுத்தும் நோக்கத்திலும் அவைகளை மறுசீரமைக்க அரசாணை எண் 125 தேதி 21.07.08 ல் அரசு உத்தரவிட்டுள்ளது. மேலும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் சட்ட ரீதியான அங்கீகாரம் பெறவும், வங்கிகள் மூலம் எளிதாக கடன் பெறவும் வழி வகை செய்ய வகையில் இக்கூட்டமைப்புகளை தமிழ் நாடு சங்கங்கள் பதிவுச்சட்டம், 1975 ன் கீழ் பதிவு செய்ய அரசு உத்தரவிட்டுள்ளது.
- தமிழ் நாடு சங்கங்கள் பதிவுச்சட்டம் 1975 ல் விதிகள் 25 மற்றும் 42 ன் செயல்பாட்டில் இருந்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு விலக்களித்து அரசாணை எண் 111 நாள் 17.11.2008 ல் அரசு உத்தரவிட்டது. இந்த விலக்களிப்பு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வருவாய் ஈட்டும் தொழிலை மேற்கொண்டு அவற்றிலிருந்து பயன்கள் அடையும் வகையில் ஒரு நிறுவன அமைப்பாக உருவாக வழி வகுக்கிறது.

- மாநிலத்திலுள்ள அனைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளையும் அடுத்த மூன்று வருடங்களில் மறுசீரமைக்க செயல் திட்டம் வடிவமைக்கப்பட்டு இதுவரை 946 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மறுசீரமைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன.

**9. மணிமேகலை விருதுகள்:**

சிறப்பாக செயலாற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களையும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளையும் ஊக்குவிக்கும் வகையில் மாநில மற்றும் மாவட்ட அளவிலான மணிமேகலை விருதுகளை அரசு அறிவித்துள்ளது. மாநில அளவில் ஐந்து சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும், 10 சிறந்த சுய உதவிக் குழுக்களுக்கும் விருதுகள் வழங்கப்படுகின்றன. மாவட்ட அளவில் ஒரு சிறந்த சுய உதவிக் குழு கூட்டமைப்பு மற்றும் 3 சிறந்த சுயஉதவிக்குழுக்கள் தேர்வு செய்யப்பட்டு, அவற்றிற்கு இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன. வட்டார அளவில் சிறப்பாக செயல்படும் ஒரு சுய உதவிக் குழுவிற்கு சான்றிதழ் வழங்கப்படுகிறது.

- 2006–07 ம் ஆண்டிற்கான விருதுகள், செப்டம்பர் 2007 மற்றும் 2007–08 ம் ஆண்டிற்கான விருதுகள் நவம்பர் 2008 லும் வழங்கப்பட்டன.

**10. சுய உதவிக் குழுக்களுக்கிடையே போட்டிகள்:**

சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கிடையே ஒற்றுமை மற்றும் குழு உணர்வை உருவாக்கும் நோக்கத்தில் வட்டார மற்றும் மாவட்ட அளவில் பல்வேறு போட்டிகள் நடத்தப்படுகின்றன. இப்போட்டிகள் நடத்த 2007–08 முதல் தலா ரூபாய் 1.60 கோடி வீதம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்போட்டிகள் சுய உதவிக் குழுக்களுக்கிடையே பெரும் வரவேற்பை பெற்றது.

**11. சுய உதவிக்குழுக்களுக்கு அடையாள அட்டை வழங்குதல்:**

மகளிர் சுய உதவிக்குழுக்கள் சமுதாயத்தில் அங்கீகாரம் பெறவும், வங்கிகள் மற்றும் அரசுத் துறை நிறுவனங்களை எளிதில் அணுகி பயன் பெறவும், மகளிர் திட்ட சுய உதவிக்குழுக்களுக்கு படிப்படியாக அடையாள அட்டை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

- அடையாள அட்டை வழங்கும் பணி முன்னோடியாக தற்போது 4 வட்டாரங்களில் முடிவுற்றது
- 15 மாவட்டங்களில் அடையாள அட்டைகள் அச்சிடும் பணி நடைபெற்று வருகிறது.

## 12 . இளைஞர்களுக்கான தொழிற் பயிற்சி :

தமிழ் நாட்டில் இதற்கு முன் கண்டிராத வகையில் பெரும் வளர்ச்சியை கண்டு வரும் தொழில் துறையில் பொருத்தமான தொழிற் பயிற்சிகள் வழங்குவதன் மூலம் வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள் வேலை வாய்ப்புகளை பெறலாம். இதனைக்கருத்திற் கொண்டு 2006–07 ஆம் ஆண்டு முதல் இளைஞர் தொழிற் பயிற்சி வழங்க அரசு அனுமதித்துள்ளது.

- 2008–09 ஆம் ஆண்டு 25000 இளைஞர்கள் பயிற்சி பெறுவதற்காக ரூ.20 கோடி உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், நோக்கியா, டி.வி.எஸ், மற்றும் ஐ எல் அண்டு எப் எஸ், போன்ற சிறந்த நிறுவனங்கள் மூலம் இதுவரை 26,408 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புடன் கூடிய தொழிற்பயிற்சி அளித்துள்ளது.

# தமிழ்நாடு வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

## வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

வாழ்ந்து காட்டுவோம் திட்டம் உலக வங்கி உதவியுடன் ரூ.717.00 கோடி செலவில் 6 ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்படும் ஓர் ஆற்றலளிப்பு மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டமாகும். இத்திட்டம் 15 மாவட்டங்களில் மிகவும் பின்தங்கிய 70 வட்டாரங்களிலுள்ள 2480 ஊராட்சிகளில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் நவம்பர் 2005–ல் தொடங்கப்பட்டிருப்பினும், ஜீலை 2006 முதல் தான் தீவிரமாக செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டம் மொத்தம் நான்கு கட்டங்களாக நடைமுறைபடுத்தப்படுகிறது. அக்டோபர் 2006 முதல் 15 வட்டாரங்களில் உள்ள 578 கிராம ஊராட்சிகளில் முதற்கட்டமாகவும், ஏப்ரல் 2007 முதல் 15 வட்டாரங்களில் உள்ள 585 கிராம ஊராட்சிகளில் இரண்டாம் கட்டமாகவும், பிப்ரவரி 2008 முதல் 20 வட்டாரங்களில் உள்ள 633 கிராம ஊராட்சிகளில் மூன்றாவது கட்டமாகவும், நவம்பர் 2008 முதல் நான்காம் கட்டத்தில் தொடக்க நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 1. பணியமைப்பு :

மாநில, மாவட்ட மற்றும் பகுதியளவில் தேவையான பணியாளர்கள் அறிமுகப்பயிற்சிக்குப் பின் பணியிலுள்ளனர். 14 மாநில வல்லுனர்கள், 18 மாவட்ட திட்ட மேலாளர்கள், 103 உதவி திட்ட மேலாளர்கள் மற்றும் 881 திட்ட ஒருங்கிணைப்பு அணி உறுப்பினர்களும் பணியில் உள்ளனர்.

திட்டப் பணியாளர்களை ஊக்கப்படுத்தும் முகத்தான், பணியாளர்களின் பணி மதிப்பீட்டின் அடிப்படையில் ஊதிய உயர்வு வழங்குவதற்கான ஒரு உன்னதமான திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் பலனாக பணியாளர்கள் பணிவிலகும் எண்ணிக்கை மிகமிகக் குறைந்துள்ளதோடு பணியாளர்களும் ஊக்கம் பெற்று பணித்திறன் மேம்பட்டுள்ளது.

### 2. மக்கள் ஆய்வு மூலம் இலக்கு மக்களை கண்டறிதல்:

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில் மக்கள் பங்கேற்புடன் மக்களே ஆய்வு செய்து இலக்கு மக்களை கண்டறிகின்றனர். இந்த ஆய்வுப் பணி 1786 கிராம ஊராட்சிகளில் முடிவடைந்துள்ளது. மேற்கண்ட ஆய்வுப் பணியின் மூலம் இது வரை 3.5 இலட்சம் குடும்பங்கள் இலக்காக கண்டறியப்பட்டுள்ளன.

**3. கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் சமூக தணிக்கை குழுக்கள் உருவாக்குதல்:**

இலக்கு மக்கள் கண்டறியப்பட்டப்பின் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் சமூக தணிக்கை குழுக்கள் போன்ற மக்கள் அமைப்புகள் உருவாக்கப்படுகின்றன.

கிராம அளவில், திட்ட செயல்பாடுகளை செயல்படுத்தும் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு திட்ட நிதி நேரடியாக விடுவிக்கப்படுகிறது.

கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் சமூக தணிக்கை குழுக்கள் 1695 கிராம ஊராட்சிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் 97 பழங்குடியினர் குடியிருப்புகளில் சிறப்பு பழங்குடியினர் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இதுவரை கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு நிதியாக ரூ.150/– கோடி நேரடியாக வழங்கப்பட்டுள்ளது.

**4. புதிய சுய உதவிக்குழுக்கள் அமைத்தல்:**

இத்திட்டத்தின் மூலம் விடுபட்ட ஏழைகளைக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு தக்க திறன் வளர்ப்பு பயிற்சிக்கு பின் வங்கி இணைப்பு செய்து தரப்படுகிறது.

இது வரை பெண்கள் மற்றும் இளைஞர்களைக் கொண்டு 6540 சுய உதவிக் குழுக்களும், ஊனமுற்றோரை கொண்டு 3499 சுய உதவிக் குழுக்களும் உருவாக்கப்பட்டுள்ளன. ஆக மொத்தம் இத்திட்டத்தில் இதுவரை 10039 புதிய சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

புதியதாக உருவாக்கப்பட்ட சுய உதவிக் குழுக்களில் 5311 சுய உதவிக் குழுக்களுக்கு (75%) சுழல் நிதியும், வங்கி கடனும் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு வங்கிகள் மூலம் வழங்கப்பட்டுள்ள கடனின் தொகை ரூ.27.62 கோடி ஆகும்.

இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள சுயஉதவிக்குழுக்கள் சமூகத்திலிருந்து உருவாக்கப்பட்ட பயிற்றுநர்களால் தீவிரமாக கண்காணிக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம் 3184 சமூக சுயஉதவிக்குழு பயிற்றுநர்கள் உருவாக்கப்பட்டு, சுயஉதவிக்குழுக்களுக்கு அனைத்து உதவிகளையும் அளித்து வருகின்றனர்.

**5. ஊனமுற்றோர் மற்றும் நலிவுற்றோருக்கான சிறப்புத் திட்டங்கள் :**

இத்திட்டம் ஊனமுற்றோர் மற்றும் நலிவுற்றோருக்கு மறுவாழ்வு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டுக்கு உதவிகள் அளிப்பதோடு, அவர்களின் உரிமைகளை பெறுவதற்கும் உதவுகிறது.

இத்திட்டத்தின் மூலம் கண்டறியப்பட்ட 48543 ஊனமுற்றோரில் (94 சதவிகிதத்தினருக்கு) தேசிய அடையாள அட்டைகள் இத்திட்டத்தின் முயற்சியால் பெற்று தரப்பட்டுள்ளது.

30922 ஊனமுற்றோர் மற்றும் நலிவுற்றோருக்கு தொழில் தொடங்குவதற்கு நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஊனமுற்றோர்களுக்காக உருவாக்கப்பட்ட 3184 சுயஉதவிக்குழுக்கள் வங்கிகளுடன் இணைக்கப்பட்டு ரூ.7.84 கோடி வங்கி கடன் பெறப்பட்டுள்ளது. வங்கிகள் மூலம் ஊனமுற்றோருக்காக குறிப்பிடத் தக்க அளவில் கடன் பெற்றுள்ளது இதுவே முதன் முறையாகும்.

கடுமையாக ஊனமுற்ற 1485 நபர்கள் பராமரிப்பு உதவியும் 8325 வயதானோர் முதியோர் உதவித் தொகையும் இத்திட்டம் மூலம் பெற்றுள்ளனர்.

5927 ஊனமுற்றோருக்கு ரூ.118/– இலட்சம் செலவில் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**6. இளைஞர் மேம்பாடு:**

இத்திட்டம் இளைஞர்களை வளர்ச்சி பணிகளில் ஆக்கபூர்வமாக ஈடுபடுத்தவும், அவர்களின் திறன்களை வளர்த்து வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தவும் சிறப்பு முயற்சிகள் எடுத்து வருகிறது.

புகழ் பெற்ற பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்கள் உதவியுடன் 23621 இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி அளிக்கப்பட்டு 20232 இளைஞர்கள் வேலைகளில் அமர்த்தப்பட்டுள்ளனர். இவை தவிர 10978 இளைஞர்கள் தொழிற் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இளைஞர்களுக்கு தொழில் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு அளித்திட நோக்கியா, பாக்ஸ்கான், எம்.ஆர்.எப்., அசோக் லேலாண்ட், இன்டிமேட் பேஷன்ஸ் போன்ற புகழ்பெற்ற தொழில் நிறுவனங்களுடன் இத்திட்டம் தொடர்பு வைத்துள்ளது.

1695 கிராம ஊராட்சிகளில் இளைஞர் துணை குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு வழங்கப்படும் நிதியில் 20% இளைஞர் மேம்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிதியினை பயன்படுத்தி இளைஞர்களை ஈடுபடுத்தி கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் பயனுள்ள செயல்பாடுகளை தொடங்கியுள்ளன. கல்வி மையங்கள், வேலைவாய்ப்பு ஆலோசனை மையங்கள், கிராம தகவல் மையங்கள், உடற்பயிற்சி கூடங்கள் ஆகியவை இந்த செயல்பாடுகளில் அடங்கும்.

**7. ஊராட்சி அளவிலான சுயஉதவிக்குழு கூட்டமைப்புகள் மறு சீரமைப்பு செய்தல்:**

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில், அரசின் கொள்கைபடி ஊராட்சி அளவிலான சுய உதவிக்குழு கூட்டமைப்புகள், அனைத்து குழுக்களும் இணைந்து ஜனநாயக ரீதியாக பங்கேற்கும் வண்ணம் மறுசீரமைப்பு செய்யப்படுகின்றன. மறுசீரமைப்பு செய்யப்பட்ட பின் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975 யின்கீழ் பதிவு செய்யப்படுகிறது. சுயஉதவிக்குழு உறுப்பினர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அமுதசுரபி எனும் வாழ்வாதார நிதி ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பிற்கு வழங்கப்படுகிறது. இதுவரை 780 ஊராட்சிகளில் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்புகள் மறு சீரமைக்கப்பட்டுள்ளன. 609 ஊராட்சிகளுக்கு வாழ்வாதார நிதி ரூ.26.84 கோடி இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளது.

**8. வாழ்வாதார மேம்பாடு:**

ஏழைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த இத்திட்டம் தனிநபர் மற்றும் சிறு குழுக்களின் தொழில் நடவடிக்கைகளை வங்கிகள் மூலம் பெறப்படும் நிதி உதவியுடன் மேற்கொள்ள உதவுகிறது.

மேலும் அதிக அளவில் இலக்கு மக்கள் ஈடுபட்டுள்ள தொழில்களில், தொழில் கூட்டமைப்புகளை உருவாக்கவும் துணை புரிகிறது.

மொத்தம் 1200 உறுப்பினர்களை கொண்ட 30 தொழில் கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. பால்பண்ணை, ஆயத்த ஆடை உற்பத்தி, பூ சாகுபடி, செங்கல் சூளை, வெண்பன்றி வளர்ப்பு போன்றவை கூட்டமைப்புகளால் மேற்கொள்ளப்படும் சில தொழில்கள் ஆகும்.

மார்ச் 09 வரை ரூ.1.03/– கோடி திட்ட நிதியாக இக் கூட்டமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**9. மக்கள் கற்றல் மையம் (மகமை):**

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் பெற்ற அனுபவம் மற்றும் ஆற்றல்களை பகிர்ந்து கொள்வதற்கு ஒரு தலமாகவும், மக்கள் வழியாக மக்கள் கற்றுக் கொள்ளும் ஒரு மையமாக மகமை திகழ்கின்றது.

வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மகமையை உருவாக்க தேவையான தொடக்க நிதியை (Initial seed money) வழங்குகிறது. முன்மாதிரியாக நாமக்கல், திருவண்ணாமலை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் அமைக்கப்பட்ட 3 மகமைகள் சிறப்பாக இயங்கி வருகின்றன. மகமைகளின் உறுப்பினர்கள் அதாவது சமூக வல்லுநர்கள் 3வது மற்றும் 4வது வட்டாரங்களிலும் மற்றும் பலவீனமாக உள்ள கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கும் பயனுள்ள சேவைகளை அளித்து வருகின்றனர்.

**10. மக்கள் சுகாதார காப்பீட்டு திட்டம்:**

சமூக பாதுகாப்பிற்கான இத்திட்டம் முன்மாதிரியாக விழுப்புரம் மாவட்டம் கண்டமங்கலம் வட்டாரத்தில் செயல்படுகிறது. இத்திட்டம் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களால் 25.11.2008 அன்று துவக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் 6500 ஏழை குடும்பங்கள் பயனடைந்துள்ளன. கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களின் கூட்டமைப்பு இத்திட்டத்தை நிர்வகிக்கும் அமைப்பாக (Third Party Administrator) செயல்படுகிறது. முன்மாதிரி திட்டத்தின் வெற்றியினை தொடர்ந்து திருவள்ளூர் மாவட்டத்தில் எல்லாபுரம் வட்டாரத்திலும் திருவண்ணாமலை மாவட்டத்தில் செங்கம் வட்டாரத்திலும் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது.

**11. நிதி செலவின சாதனை:**

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில் மார்ச் 2009 வரை ரூ.199.73 கோடி திட்ட நிதி செலவிடப்பட்டுள்ளது.

# சுனாமி மறுவாழ்வுத் திட்டங்கள்

**I. ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும் சுனாமி அவசரகால உதவித் திட்டம் (TEAP):**

- இத்திட்டம் 06.04.2005ல் தொடங்கப்பட்டது. எனினும் 13.5.2006 வரை 4.95 கோடி ரூபாய் மட்டுமே செலவிடப்பட்டிருந்தது. தற்போது இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.309.66 கோடியில் இதுவரை சுமார் 285.72 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

- இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் அனைத்துத் துறைகளினாலும் இது வரை 575.71 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இதில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினால் செலவிடப்பட்டுள்ள 285.72 கோடி ரூபாய் **மொத்த செலவில் சுமார் 50% விழுக்காடு ஆகும்.**

**(அ) வாழ்வாதாரத் திட்டங்கள்: (Livelihood Component)**

- வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ், சுய உதவிக் குழுக்களுக்குச் சுழல் நிதி, பொருளாதார மேம்பாட்டு உதவி மற்றும் உடல் ஊனமுற்றோர் சுயதொழில் தொடங்க மானிய உதவி ஆகியவை வழங்குவதில் இலக்கீடு 100 சதவிகிதம் எய்தப்பட்டுள்ளது.

- உடல் ஊனமுற்றோர் தங்களது வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள வங்கிகளில் கடன் பெறுவது கடினமானதாக உள்ளது. கடலோர மாவட்டங்களில் உள்ள உடல் ஊனமுற்றோர் ஒவ்வொருவருக்கும் **10,000/– ரூபாய் மான்யமாக** அளித்து அதன் மூலம் தொடர் வருமானம் தரக் கூடிய ஒரு சுய தொழிலை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. **34,634** உடல் ஊனமுற்றோருக்கு சுமார் **34.63** கோடி ரூபாய் மான்யமாக வழங்கப்பட்டுள்ளது.

| உட்கூறுகள் | செயல்திறன் | | நிதித் திறன் (ரூபாய் இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|
| | இலக்கீடு | சாதனை | இலக்கீடு | சாதனை |
| சுழல் நிதி | 33,549 | 33,549 | 8,880.10 | 8,880.10 |
| பொருளாதார மேம்பாட்டு உதவி | 2,472 | 2,472 | 3,155.99 | 3,155.99 |
| ஊனமுற்றோருக்கான நிதி உதவி | 34,634 | 34,634 | 3,463.40 | 3,463.40 |

**(ஆ)** கடலோர மாவட்டங்களில் உள்ள சுய உதவிக் குழுக்கள், மீனவர்கள், கைவினைஞர்கள், நெசவாளர்கள் போன்ற பல்வேறு பிரிவினருக்கும் தேவையான திறன் வளர்ச்சி பயிற்சி அளித்திடவும், உள்கட்டமைப்புகளை ஏற்படுத்தவும் 8 திட்டங்கள் சுமார் 23.58 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்படுகின்றன.

- **சுமார் 12.38 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை வள்ளுவர் கோட்ட வளாகம் அருகில் சுய உதவிக் குழுக்களுக்கென ஒரு வளாகம் கட்டும் பணிக்கான** மதிப்பீடு ஒப்புதல் பெறப்பட்டு அதற்கான ஒப்பந்தம் செய்யப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டு கட்டுமானவேலை நடைபெற்று வருகின்றது.

- ஏழு கடற்கரை மாவட்டங்களில் உள்ள 93 மீனவர் சங்கங்களுக்கு 2.96 கோடி ரூபாய் நடைமுறை மூல தனம் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சுமார் 5,000 மீனவர் சங்க உறுப்பினர்கள் நேரடியாகவும் சுமார் 20,000 மீனவர்கள் பயனாளிகளைச் சார்ந்தும் பயன்பெற்றுள்ளனர்.

- கடல் பாதுகாப்பு பயிற்சித் திட்டத்தின் கீழ் மீனவர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு கடல் பாதுகாப்பு முறைகளில் ரூ.112.87 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பயிற்சிகள் துவங்கப்பட்டு இதுவரை 31,959 மகளிர்களுக்கும் 36,890 மீனவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

- தஞ்சாவூர் மாவட்டத்தில் 4 மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் 11 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் 1 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன.

- 4.06 கோடி ரூபாய் செலவில் 11 கடலோர மாவட்டங்களில் 9 பால் குளிரூட்டும் நிலையங்கள், 37 பால் விநியோகிக்கும் நிலையங்கள், மற்றும் இந்த தொழிலில் ஈடுபடும் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

  இது வரை 3,645 நபர்களுக்கு பால் உற்பத்தி மற்றும் கறவை மாடுகள் பராமரித்தல் குறித்த பயிற்சியும், 400 நபர்களுக்கு பால் மற்றும் பாலிலிருந்து தயார் செய்யப்படும் பொருட்கள் விற்பனை குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தற்போது அனைத்து (37) பால் விநியோகிக்கும் நிலையங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

160 பால் கூட்டுறவு சங்கங்கள் புதுப்பிக்கப்பட்டு அவற்றிற்கு 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 9 பால் குளிரூட்டு நிலையங்களும் கட்டி முடிக்கப்பட்டு செயல்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- கைத்தறி ஏற்றுமதியை ஊக்குவிக்க கன்னியாகுமரி மாவட்டத்தில் 250 நெசவாளர்களுக்கு 61.09 இலட்சம் ரூபாய் ஒதுக்கீட்டில் திறன்வளர் பயிற்சி மற்றும் அவர்களது கைத்தறிகளை மேம்பாடு செய்து புதுப்பித்தல், மற்றும் பொதுவான பணி மையம் கட்டும் பணிகள் முடிவுற்றது.

  250 கைத்தறிகளை மேம்படுத்தி இத்தறிகளில் நெசவாளர்களுக்குத் திறன் வளர் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 8 பணி மையக் கட்டிடங்களில் சீரமைப்புப் பணிகள் முடிவுற்றது.

- விழுப்புரம் மாவட்டத்தில் 51 இலட்சம் ரூபாய் செலவில் 500 கைவினைஞர்கள் பயன்பெறும் கைவினைஞர் கிராமம் அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

### (இ) சாலைகள் மற்றும் வடிகால்கள் (Roads and Drainages)

- கடலோர ஊராட்சிகளில் சுமார் 698.46 கி.மீ. நீளத்திற்கு 610 சாலைப்பணிகள் 94 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளன.

### (ஈ) ஊராட்சி மன்றக் கட்டிடங்களைப் புதுப்பித்தல்

கடலோர ஊராட்சி மன்றக் கட்டிடங்களைப் புதுப்பித்தல், கூட்ட அரங்குகள் கட்டுதல், ஆகிய 196 பணிகள் 5 கோடியே 62 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

## II. ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டம் (RGRP)

### அ) தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் கட்டாமல் விலகிய வீடுகள் கட்டுதல் மற்றும் அடிப்படை வசதிகள் செய்தல்.

- ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தில் காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், நாகப்பட்டினம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் தன்னார்வத் தொண்டு

நிறுவனங்கள் கட்டாமல் விலகிய 2,687 வீடுகள் கட்டும் பணி சுமார் 64.92 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரசின் மூலம் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்போது சுமார் 1539 வீடுகள் முற்றிலுமாக கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் அனைத்தும் நடை பெற்று வருகின்றன.

- இப்பகுதிகளில் அடிப்படை வசதிகளான சிமெண்ட் கான்கிரீட் சாலைகள், தெரு விளக்குகள், பொதுக் கட்டிடங்கள், தெரு விளக்குகள், வீடுகளுக்கு மின் இணைப்புகள் வழங்குதல் ஆகியவை சுமார் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**ஆ) தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் வீடுகள் கட்டிய பகுதிகளில் அடிப்படை வசதிகள் செய்தல்.**

தொண்டு நிறுவனங்கள் வீடுகள் கட்டிய பகுதிகளில் அடிப்படை வசதிகள் அரசின் மூலம் ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தில 53.52 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 40.49 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 132 உட்புற சிமெண்ட் கான்கிரீட் சாலைகள், 4.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4,732 சுகாதார கழிப்பறை வசதிகளும், 2.76 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தாழ்வான நிலப்பகுதிகளில் மண் நிரப்பும் பணிகளும், 5.47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தெருவிளக்குகள் மற்றும் வீடுகளுக்கு மின் இணைப்புகள் அமைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முடிவு பெற்றுள்ளன.

**இ) எளிதல் பாதிப்புக்குள்ளாகும் வீடுகளை ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தின் மூலம் மீளக்கட்டுதல் மற்றும் அடிப்படை வசதிகள் செய்தல்.**

- 11 கடலோர மாவட்டங்களில் அலை ஏற்றத்திலிருந்து 200 மீட்டருக்குள் உள்ள எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகள், 1,000 மீட்டருக்குள் உள்ள இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் மற்றும் மீனவர் குடியிருப்பு திட்டங்களின் கீழ் அரசால் கட்டப்பட்ட 01.01.2006ல் 10 ஆண்டுகள் பழமையான சுமார் 18,057 வீடுகளை ராஜீவ் காந்தி புரைமைப்பு திட்டத்தின் கீழ் சுமார் ரூ. 486.69 கோடி செலவில் மீளக் கட்டும் பணிகள் விரைவாக நடை பெற்று வருகின்றன. இதுவரை 510 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் அனைத்தும் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

- மேற்கண்ட வீடுகள் கட்டும் பகுதிகளில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நெறிமுறைகளின் படி அடிப்படை வசதிகளான சிமெண்ட் சாலைகள், தார்ச் சாலைகள், குடிநீர் வழங்கல், தெருவிளக்குகள், குளம் சீரமைத்தல் மயானம் சீரமைப்பு, அங்கன்வாடி

மையங்கள்/ சமையல் கூடங்கள் கட்டுதல் போன்ற பணிகள் சுமார் 69.42 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2846 பணிகள் எடுக்கப்பட்டு அதில் 1802 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள அனைத்துப் பணிகளும் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

### III. உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் சுனாமி அவசர மறுசீரமைப்பு திட்டம் (ETRP-VRCCP)

தமிழகத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களின் வாழ்வாதாரங்களை மீளப் பெறவும், பாதிப்படைந்த வீடுகளை மீளக் கட்டிடவும் தமிழ்நாடு அரசு உலக வங்கியின் தொழில் நுட்பம் மற்றும் நிதி உதவியுடன் சுனாமி அவசர மறுகட்டமைப்பு திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. தொண்டு நிறுவனங்கள் சுனாமியால் நேரடியாக பாதிக்கப்பட்ட வீடுகளை மீண்டும் கட்டித் தர தாங்களாகவே முன்வந்ததால், உலக வங்கியிடமிருந்து பெறப்படும் கடன் தொகையில் கணிசமான சேமிப்பு ஏற்பட்டது.

அரசு, இத்திட்டத்தின் கீழ் கடல் உயர் அலை ஏற்றத்திலிருந்து 200 மீட்டர் முதல் 1000 மீட்டர் தொலைவிற்குள் உள்ள எளிதில் பாதிக்கக்கூடியவையாக அறியப்பட்ட வீடுகளை எதிர்காலத்தில் சுனாமி போன்ற பேரிடர்களிலிருந்து பாதுகாக்கும் வகையில் மீண்டும் கட்டித் தர முடிவு செய்துள்ளது.

உலக வங்கி நிதி உதவியுடன் சுனாமி அவசர மறுகட்டமைப்புத் திட்டத்தின் கீழ் இத்துறை கீழ்கண்ட கட்டுமான பணிகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது.

I. கடல் உயர் அலை ஏற்றத்திலிருந்து 200 மீட்டர் முதல் 1000 மீட்டர் வரையிலுள்ள கடலோரப் பகுதிகளில் உள்ள எளிதில் பாதிப்புக்குள்ளாகும் எனக் கண்டறியப்பட்ட சுமார் 17,000 வீடுகளை மீளக் கட்டித் தருதல்.

II. அவசர காலத்தில் எளிதாக வெளியேறி தப்பித்து செல்லத் தேவையான வெளியேறும் சாலைகளை அமைத்தல். மேலும் வெளியேறும் சாலைகளில் பாதுகாப்பான பகுதியினை சென்றடைய ஏதுவாக வழிகாட்டுப் பலகைகள் அமைத்துத் தருதல்.

உலக வங்கியுடன் அரசின் வருவாய்த்துறை அலுவலர்கள் நடத்தி வரும் பேச்சுவார்த்தை முன்னேற்றமடைந்த நிலையில் உள்ளது. மேலும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகள் இறுதி செய்யும் நிலையில் உள்ளன.